277

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

# குமரகுருபரன்



மலர் 28 | பிங்கள ௵ ஆனி இதழ் 1௳ [15—6—'77] | இதழ் 6

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

## சைவ சமயத்தின் மாண்பு 12

ஸ்ரீ-ல-ஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்,
இளவரசு, மதுரை ஆதீனம்.

அருங்கலைகள் அறுபத்து நான்கின் விவரம்:

1) அக்ஷரம் (எழுத்து இலக்கணம்) 2) இலிகிதம் 3) கணிதம், 4) வேதம், 5) புராணம், 6) வியாகரணம்

7) நீதி சாத்திரம் 8) வானசாத்திரம், 9) சோதிடசாத்திரம் 10) தரும சாத்திரம், 11) மந்திரசாத்திரம் 12) சகுன சாத்திரம், 13) சிற்பசாத்திரம், 14) வைத்தியசாத்திரம் 15) உருவசாத்திரம், 16) இதிகாசங்கள், 17) காவியம் 18) அலங்காரம், 19) மதுரபாஷாணம், 20) நாடகம், 21) நிருத்தம், 22) சப்தப் பிரம்மம் (சங்கீதம்) 23) வீணை 24) வேணு (புல்லாங்குழல்), 25) மிருதங்கம், 26) தாளம் 27) அஸ்திரப்பரீட்சை (அம்புசம்பந்தம்) 28) கனகப் பரீட்சை (ஓட்டக சம்பந்தம்) 29) இரதப்பரீட்சை (இரத சம்பந்தம்) 30) கஜப்பரீட்சை (யானை சம்பந்தம்) 31) அசுவப்பரீட்சை (குதிரை சம்பந்தம்) 32) இரத்தினப் பரீட்சை 33) பூமி பரீட்சை, 34) சங்கிராம இலக்கணம் (போர்வித்தை), 35) மல்யுத்தம் 36) ஆக்ருஷணம் (கவருதல்) 37) உச்சாடனம் 38) வித்வேஷணம் (விரோதசம்பந்தம்) 39) மதனசாத்திரம் (சிற்றின்ப நுணுக்கம்) 40) மோகனம், 41) வசீகரணம், 42) இரசவாதம் (செம்பைத் தங்கம் ஆக்குதல்) 43) காந்தருவ வாதம் 44) பைபீலவாதம் 45) கவுத்திக வாதம், 46) தாது வாதம், 47) காருடம், 48) சட்டம், 49) முஷ்டி, 50) ஆகாயப் பிரவேசம், 51) ஆகாயகமனம் 52) பரகாயப் பிரவேசம், (கூடுவிட்டுக்கூடுபாய்தல்) 53) அதிரிசயம். 54) இந்திரஜாலம் 55) மகேந்திர ஜாலம் 56) அக்கினித் தம்பம் 57) ஜலத்தம்பம் 58) வாயுத்தம்பம், 59) திட்டித் தம்பம் 60) வாக்குத்தம்பம் 61) சுக்கிலத் தம்பம், 62) கன்னத்தம்பம் 63) சட்சுத் தம்பம் 64) அவத்தைப் பிரயோகம்

**வேதத்தின் ஆறு அங்கங்களின் விவரம்;**

1) சந்தஸ் (ஆரிய யாப்பிலக்கணம் கூறும் நூல்)
2) கற்பசூத்திரம் (யாகம் முதலியன செய்யும் முறை கூறும் நூல்)

3) சிட்சை (வேதம் ஓதும் முறையைக் கூறும் நூல்)

4) வியாகரணம் (வடமொழி இலக்கணம்)

5) நிருத்தம் (வேதத்தில் உள்ள சொற்களுக்குப் பொருள் விளக்கும் நூல்)

6) சோதிடம் (கால விசேஷங்களையும், வானத்தில் உள்ள கிரகங்களுக்கும், பூமியில் உள்ள ஜீவராசிகளுக்கும் உண்டான தொடர்பையும் அவரவர் செய்த புண்ணிய பாவத்திற்குத்தக்க இன்பத்தை ஊட்டுவிக்கும் நியதியையும் கூறும் நூல்)

**ஆகமத்தின் நான்கு அங்கங்களின் விவரம்:**

1) காருட தந்திரம் (இதில், எவ்வகைப்பட்ட பிணிகளும் கண்கூடாகத்தீர்க்கும் மந்திரங்களும் மருந்துகளும் பற்றிக்கூறப்பெறுகின்றன.

2) தக்ஷிணத் தந்திரம் (இதில் யோகத்தை ஆனுஷ்டிக்கும் முறையும், பகைவரை வெல்லுதற்கு உரிய மந்தரங்களும் கூறப்பெறுகின்றன)

3) வாமதந்திரம் (இதில் இரசிவாத விவரம் கூறப்பெறுகிறது.)

4) பூததந்திரம் (இது பூத, பிரேத, பிசாசு இவைகளை விரட்டும் மந்திரங்களின் விவரங்களைக்கூறுகின்றது)

மேலே குறிப்பிடப் பெற்ற நூல்கள் அனைத்தும் தேவர்களின் மொழியான வடமொழியிலேயே இருக்கின்றன. அக்கலைகளை, இன்று ஒரளவு நடைமுறையில் அனுஷ்டிக்கப் பெற்று வருகின்ற நாடு உலகத்திலேயே இந்தியாதான். அது மட்டுமல்லாமல், ஆகமமுறைப்படி பூஜைகள் நடக்கின்ற பிரமாண்டமான கோயில்களும், வானளாவிய கோபுரங்களும் பக்திச்சிரத்தையுடனும், அதற்கு வேண்டிய ஆசாரத்துடனும்

ஒழுக்கத்துடனும் வழிபாடாற்றும் பண்புடைய மக்களும் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் இருக்கின்ற அளவு வேறு பகுதிகளில் இல்லை என்பதும் முக்கியமாகும்

மேலும், கடவுளைப் பற்றியும் உலகத்தைப்பற்றியும் கலை களைப் பற்றியும் விளக்குகின்ற சாத்திரங்களும் இலக்கணங் களும், தோத்திரங்களும் ஒழுக்க நூல்களும் மிகத்தொன்மை யும் இனிமையும் வாய்ந்த மொழியான தமிழ்மொழியில் இருப் பது போல, வேறு எந்த மொழியிலும் இல்லை என்பதோடு, அவைகளில் கூறியிருக்கிறபடி நடந்து இறைவனது திரு வருளைப்பெற்ற ஞானிகளும் தென்இந்தியாவில் அவதரித்தது போல வேறு எங்கும் அவதரிக்கவில்லை என்பதும், அவர்கள் செய்திருக்கின்ற அற்புதங்கள் போல வேறுயாரும் செய்ய வில்லை என்பதும் முக்கியமாகும்.

அடுத்து, இலக்கண நூல்களில் தொல்காப்பியம் மிகவும் தொன்மையானது. இதில், எழுத்துக்களுக்கு இலக்கணமும், சொற்களுக்கு இலக்கணமும், பொருள்களுக்கு இலக்கண மும், செய்யுள் இயற்றுவதற்கு யாப்பு இலக்கணமும், மற்றும் சொல் அலங்காரம், பொருள் அலங்காரம், கூறும் அணி இலக்கணங்களும் விரிவாகவும், தெளிவாகவும் கூறப் பெற்றிருக்கின்றன. இதற்குப் பல பேராசிரியர்கள் உரை எழுதியிருக்கிறார்கள்.

சாத்திர நூல்களில், வேதாந்தத் தெளிவான சைவ சித்தாந்தச் சாத்திரங்கள் பதினான்கு இருக்கின்றன. ஸ்ரீகண்ட பரமேஸ்வரரது முன்புள்ள எட்டு முனிவர்களில் ஒருவரான பரஞ்சோதி முனிவர் ஸ்ரீ மெய்கண்ட தேவர் மூலம் தமிழ் மொழியில் இவ்வுலகுக்கு அறிவித்த ஒப்பற்ற சாத்திரம் சிவ ஞானபோதமாகும்.

அது பன்னிரெண்டு சூத்திரங்களில், நாற்பது வரிகளில் பதி (கடவுள்) பசு (உயிர்கள்) பாசம் ஆகியவற்றின் உண்மை

களைத் தெளிவாகக் கூறுகின்றது. அவ்வுண்மைகளை, விளக்கி சிற்றுரைகளும், பேருரைகளும் பல இருக்கின்றன. மெய் கண்ட தேவரது முதல் மாணுக்கராகிய தத்துவ ஞானி அருள் நந்தி சிவாச்சாரியார் அந்நூலுக்கு சுபக்க விளக்க விரிவுரை யாக முன்னூற்று இருபத்தெட்டு பாடல்கள் அருளியிருக் கிறார். அத்துடன், பிறர் கூறுகின்ற கூற்றுக்களை மறுத்து, தக்க ஆதாரங்களுடன் முன்னூற்ருெரு பாடல்கள் அருளி யிருக்கிறார். அதுவே, சிவஞானசித்தியார் என்னும் நூல் ஆகும்.. அந்நூலில், கடவுளுக்கும், உயிர்களுக்கும் - உயிர் களுக்கும் உடல்களுக்கும் - உடல்களுக்கும் உலகப் பொருள் களுக்கும் உள்ள தொடர்புகள் மிகத் தெளிவாக விளக்கப் பெற்றிருக்கின்றன.

முக்கியமாக, நமக்குள்ள தூல, சூக்கும, குண, இஞ்சுக, காரண, சரீரங்களின் தத்துவ இயல்புகளையும், அவற்றை உயிர்கள் இயக்கும் விதங்களையும்–அதனால்,நனவு, (சாக்கிரம்) கனவு (சொப்பனம்)உறக்கம், (சுழுனை) பேருறக்கம்(துரியம்) ஆழ்ந்த பேருறக்கம் துரியாதீதம் முதலியன ஏற்படும் முறை களையும் சைவசித்தாந்தம் தெளிவாக விளக்குகிறது. மேலும், கடவுள் உயிர்களை இயக்கும் முறைகளையும், உயிர்கள் உடல் களை இயக்கினாலும், உயிர்கள் வேறு, உடல்கள் வேறு என் பதுபோல, கடவுள் உயிர்களை இயக்கினாலும், கடவுள்வேறு உயிர்கள் வேறு என்ற அரியபெரிய உண்மைகளையும் தெளிவு படுத்துகின்றது,

அத்துடன் கடவுள், உயிர்களோடும், உலகத்தோடும் ஒன்றாயும் (அத்வைதமாய்)உடனாயும் (விசிஷ்டாத்வைதமாய்) வேறாயும் (துவைதமாய்) இருக்கின்ற தன்மைகளை சைவசித் தாந்த சாத்திரங்கள் விளக்குவது போல, வேறு எந்தமொழி யிலும் இல்லை என்பதை தமிழில் தேர்ச்சிபெற்ற, ஆங்கிலப் பாதிரியார் டாக்டர் ஜி. யூ. போப். மிகத்தெளிவாகக் கூறு கின்றார்.

தோத்திரங்கள் சம்பந்தமாக, பன்னிரு திருமுறைகள், நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம், திருப்புகழ், தாயுமானுர் பாடல்கள், வள்ளலார் பாடல்கள், பிள்ளைத்தமிழ், அருட் புலவர்கள் பாடியிருக்கிற தோத்திரப்பாக்கள் அனைத்தும் தமிழ் மொழியில் மொத்தம் முப்பதினுயிரத்திற்கும் மேல் உள்ளன. வேறு எந்த மொழியிலும், இந்த அளவில் தோத் திரப்பாக்களைக் காணமுடியாது.

கடவுளை நேரில் கண்டு அருள்பெற்ற 63 அனுபூதிமான் களான அடியார்களைப் பற்றியும், ஒன்பது தொகை அடியார் களைப் பற்றியும், பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரிய புராணம் விரிவாகக் கூறுகின்றது. அதில் ஞானசம்பந்தப் பெருமான், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனுர் மாணிக்கவாசக சுவாமிகள் ஆகியோர் செய்தருளிய அற்புதங் களும், அவற்றிற்குரிய அகச்சான்றுகளும் கூறப்பெற்றிருக் கின்றன. பன்னிரண்டு ஆழ்வாராதிகளைப் பற்றித் திவ்வியப் பிரபந்தம் கூறுகின்றது.

இவைதவிர, கந்தபுராணம், திருவிளையாடற் புராணம், கம்பராமாயணம், மகாபாரதம், சிலப்பதிகாரம் முதலிய சிறந்த காவியங்களும் இருக்கின்றன. இவற்றைக் கற்று ணர்ந்த அரசர்களும் அவர்களுக்குப் பின்னர், நாட்டுக் கோட்டை நகரத்தாரும் கடவுளுக்குக் கற்கோயில்களைக் கட்டினர்

ஒழுக்க நூல்கள் சம்பந்தமாக, திருவள்ளுவர் அருளிச் செய்திருக்கிற ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங் றளுக்கு ஒப்பான ஒழுக்கம் கற்பிக்கும் நூல் உலகத்திலேயே

தமிழ் மொழியைத் தவிர, வேறு எந்த மொழியிலும் கிடையாது. திருமூலதேவர் தமிழில் அருளியிருக்கிற ஆகமப் பிரமாணங்களின் சாரமே திருக்குறள். மேலும், ஔவையார் தமிழில் அருளிச் செய்திருக்கிற ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், நல்வழி, வாக்குண்டாம், போன்ற மாணவ மாணவிகளுக்கு ஒழுக்கம் - பண்பாடு கற்பிக்கும் சிறிய நூல்கள் போலவும், சமண முனிவர்கள் இயற்றிய நாலடியார் போன்ற ஒழுக்க நூல்கள் போலவும் உலகில் வேறு எந்த மொழியிலும் கிடையாது.

தொடரும்

# அருள் மொழி அமுது.

## 34. கழுமலமுது பதிக்கவுணியர்
### F. கேட்டாலும் கண்டாலும் மருந்து!

**திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,**
3।19, கீழ இரண்டாம் வீதி,
புதுக்கோட்டை–1, திருச்சி மாவட்டம்.

---

**திருச்சிற்றம்பலம்**

''யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே'' என்பது ஒருபழமொழி. ஞானசம்பந்தர்மதுரை வருமுன்னரே சமணர்கட்குப் பல தீயசகுனங்கள் ஏற்பட்டன. தீயகனவுகள் கண்டனர். எல்லோரும் மதுரை வந்து சேர்ந்தனர். ''அசோகமரம் வேரோடு பிடுங்கிக்கொண்டு அருகதேவர் மீது விழக்கண்டோம். சுடுகாட்டில் ஆடும் தெய்வத்தின் தொண்டர்கள் மதுரையில் வந்து நிறையக்கண்டோம். மன்னன் நெருப்பில் மூழ்கி மீண்டும் உயிரினேடு எழுந்து வரக்கண்டோம். இளங்களைக்கன்று ஒன்று நம்கழகங்களை அழிக்கவும், நாம் இலையில்லாது பட்டுதிர்ந்து போன மரத்தில் ஏறிப்புலம்பிக்கொண்டிருந்தோம். நம் குருவாக உள்ளவர்களுக்கு ஏதோ கெடுதல்'' எனக்கூன்பாண்டியனிடம் கூறினர். இதே நேரத்தில் சைவப்பற்று மிகுந்த மந்திரி குலச்சிறையாருக்கும் மன்னன்தேவியாருக்கும் நன்னிமித்தங்கள்தோன்றின.

இந்நிலையில் ஞானசம்பந்தப் பெருமான்மதுரை வந்தனர். பாண்டிய நாட்டில் பரவியிருந்த சமணமெனும் பாவ இருளைப்

போக்க வந்த புண்ணியம் எனும் சேனைவந்தது போலிருந்தது. சமணர்கள் உடல் நீராடாததினால் அழுக்கு நிறைந்தது, சிவ தூஷணைகாரணமாக மனமும் அழுக்கு நிறைந்தது. சைவச் செல்வர்களின் திரு நீற்றொளியும், அஞ்செழுத்து மந்திரம் கூறிய தூயமனமும் சேர்ந்து சமணிருள் நீக்கவந்த கங்கை மாதிரிமனத்திற்குத் தோன்றுகிறது என்கிறது சேக்கிழார் வாக்கு.

துன்னுமுழு உடற்றுகளாற் சூழும் உணர் வினிற்றுகளால்
அன்னெறியில் செறிந்தடைந்த அமண்மாசு கழுவுதற்கு
மன்னியொளிர் வெண்மையினால் தூய்மையினால் வழுதியர்தம்
கன்னிநாட் டிடைக்கங்கை அணைந்ததெனும் கவின்காட்ட

பாண்டிமாதேவி பாண்டியனிடம் ஆலவாய் இறைவனைக் கும்பிடவேணுமென்று கூறி சம்பந்த மூர்த்தியைக்காணவந்தார். தான் சமணமதத்திற்கு மதிப்புக் கொடுத்தாலும், தன் கருத்தைத்தனது மனைவியின் மீது திணிக்காத பாண்டியனின் உயர்ந்த குணம் பாராட்டத்தக்கது,! இதுவும் சிவபெருமான் திருவருளே! பாண்டிமாதேவியால்தானே பாண்டியனும் விபூதி சாதன நெறியைப் பின்பற்றும் பேறுபெற்றான்! பாண்டிமாதேவியும். கணவனறியாது ஒன்றும் செய்யவில்லை. கணவனின் உத்திரவு பெற்றே எதனையும் செய்தாள் என்பது எண்ணி இன்புறலாம்.

மந்திரிகுலச்சிறையார் சம்பந்தமூர்த்தியை வணங்கினார் பாண்டிமாதேவிக்கும் உங்களுக்கும்நம்பெருமானருள் நிறைய உள்ளது'' என்று கூறியசம்பந்தரிடம் சென்ற காலத்தில் செய்த தவப்பயனாகவும், வருங்காலத்தில் சிறப்பும் உடையோம். தற்சமயம் தேவரீர் எழுந்தருளப் பெற்றதால் மூக்காலத்தும் திருவருள்பெற்றுள்ளோம் என்ற

றிகிறேன். நெறிதவறிநடக்கும் பாண்டிய நாடும் வேந்தனும் நன்னெறியான் சிவநெறி ஒழுகி உய்யப்போகிறோம்'' என்று கூறினர்.

சென்ற காலத்தின் பழுதிலாத்திறமும் இனி எதிர்காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்ற பேறிதனுல் எற்றைக்கும் திருவருளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும் நற்றமிழ்வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற்றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தனம்
என்பார்

பின்னர் திருவாலவாய்க்கோபுரத்தை குலச்சிறையார் காட்டக்கண்டு, பணிந்தெழுந்த சம்பந்தப்பிள்ளையார், பாண்டி மாதேவி, குலச்சிறையார் இருவரையும் குறித்து, திருவால வாய்த் தேவாரம் பாடியருளினர்.

## திருச்சிற்றம்பலம்

மங்கையர்க்கரசி வளவர் கோன்பாவை வரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநாயகனுல் வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடுமமர்ந்த ஆலவாயாவது மிதுவே.
வெற்றவே யடியார் அடிமிசை வீழும் விருப்பினன் வெள்ளை நீறணியும்
கொற்றவன்றனக்கு மந்திரியாய குலச்சிறை குலாவி நின்றேத்தும்
ஒற்றை வெள்விடையன்உம்பரார்தலைவன்உலகினிலியற்கையையொழித்திட்
டிற்றவர்க்கற்ற சிவனுறைகின்ற ஆலவாயாவது மிதுவே

## திருச்சிற்றம்பமல

கோயிலின் நுழைந்து அகங்கரைந்து கண்களில் நீர்வாரத் தலைச்சங்கத்தலைவரான இறைவனைப்பதிகம்பாடினர்.

## திருச்சிற்றம்பலம்

நீலமாமிடற் றாலவாயிலான்
பாலதாயினர் ஞாலமாள்வரே,

திருச்சிற்றம்பலம்

காழிப்பிள்ளையார் திருக்கோயிலிருந்து வெளிவந்த காலத்து, தோன்றிய பாண்டிமாதேவியை, மந்திரியார் அறிமுகஞ்செய் தார். அம்மையார் சம்பந்தமூர்த்தியை வணங்கி "நானும் என்பதியும் என்னபுண்ணியம் செய்தோம்" எனக்கூற பர சமயத்திடை சைவசமய நிலையுடன் வாழும் உங்களைக்காண வந்தேன்" என்றனர்சம்பந்தப்பெருமான்.பாண்டிமாதேவிக்கு விடைகொடுத்த சம்பந்தப்பெருமான், குலச்சிறையார் வழி காட்டப்பெற்று, தெற்காவணிமூல வீதியில் (திருஞானசம் பந்தராதீனம்) உள்ளமடத்தையடைந்தனர். பாண்டிமா தேவியின் கட்டளைப்பிரகாரம் குலச்சிறையாரின் விருந்தை ஏற்றுத்தங்கினர்.

இது இவ்வாறாக, சமணர்கள் சம்பந்தப்பெருமான் வந்து தங்கியதையும், தொண்டர்கள் தேவார இசைபாடுவதைக் கேட்டு பொருதவராய், அரசனிடம் சென்று "அரசனே! இன்று உன் மதுரையில் சைவவேதியர் வந்தனர். அவரைக் கண்டு முட்டியாம்" என்றபோது அரசன், "யாமும் கேட்டு முட்டு" என்றனர் [சைவரைக்கண்டதால் தமக்குப்பாவம் தீட்டு என்பதை சமணர் "கண்டுமுட்டு" எனக்கூற, அதே தீட்டு பாவம் தானும் அதைக்கேட்டதால் ஏற்பட்டது என் பதை "யாமும் கேட்டுமுட்டு" என அரசன் கூறினான் எனப் பொருள்). "யார் அந்தசைவவேதியர்" எனஅரசன் கேட்க, சமணர்கள்

"மாலை வெண்குடை வளவர் சோணாட்டு வண்புகலிச்
சூலபாணியால் ஞானம் பெற்றான் என்று சுருதிப்
பாலன் அன்பர்தம் குழாத்தொடும் பனிமுத்தின் சிவிகை
மேலணைந்தனன் எங்களை வாதினில் வெல்ல"

என்றனர். "அதற்கு நாம் என்ன செய்யலாம்? "என அரசன் கேட்க 'நமது மந்திரம் கொண்டு அம்மடத்தில் தீவைத்தால், அவன் ஊரை விட்டு ஓடிவிடுவான்" எனச்சமணர் கூற அரசனும் அவ்வாறே செய்யுமாறு பணித்தனன். பின்னர் அரசன் கவலையுடனிருந்தான். பாண்டிமாதேவி அரசனிடம் வந்து, கவலைக்குக்காரணம் கேட்டு "எவர் வெல்லுகிருரோ அவர் பக்கம் சேருவதுதான் நேர்மை. இதற்குக்கவலை வேண்டாம்" எனக்கூறியபாண்டிமாதேவியார் "ஞானசம்பந்தருக்கு ஏதாவது தீங்கு நேர்ந்தால் நாமும் உயிர்துறப்போம்" என மந்திரியிடம் கூறினர்.

சமணர்கள் மந்திரங்கொண்டு தீயை ஏவினர். மந்திரத்துக் கெல்லாம் தலைமையான பஞ்சாக்ஷரம் ஓதுவார் இருக்கும் திக்கிற்குக்கூட மற்ற மந்திரங்களின் சக்தி வராது.

ஆதி மந்திரம் அஞ்செழுத்தோதுவார் நோக்கும்
மாதிரத்தினும் மற்றைமந்திர விதிவருமே

என்கிறது அருள்மொழியாரின் மந்திரக்கவிதை. மந்திரங்கள் பலிக்காதது கண்டு மருண்ட சமணர்கள், பொதிதழல், மறைந்த நெருப்பைக் கொண்டுவந்தனர். திடீரென்று தீப்பிடிக்கும் Phosperous போன்ற பொருள் கொண்டு வந்தனர் சமணர் இம்மாதிரி விஞ்ஞானத்தினும் வல்லவர் என்பர்.

பூதி சாதனர் மடத்தில் தீவைக்கப்பெற்றது. விபூதி சாம்பலன்றோ? மடத்தில் தீவைத்தால் சாம்பல் அதிகமாகுமே தவிரக் குறையுமோ? விபூதி என்றும் அழியாத ஐஸ்வர்யமன்றோ? "நமது மந்திரம் பலியாததை அரசன் அறிந்தால் நம்மீதுள்ள மரியாதை குறையும்" என எண்ணியே இவ்வாறு செய்தனர்: இதையறிந்த சம்பந்தப் பெருமான் என்மீதுள்ள வெறுப்பால் செய்த போதிலும் இறைவனின் அடியார் தங்கும் மடத்தினில் தீவைத்தனர்" என எண்ணி,

## திருச்சிற்றம்பலம்

செய்யனே திருவாலவாய மேவிய
ஐயனே அஞ்சலென்றருள் செய்யெனைப்
பொய்யராம் அவுணர் கொளுவும் சுடர்
பையவே சென்று பாண்டியர்க்காகவே

## திருச்சிற்றம்பலம்

"பாண்டியற்காகவே" எனச்சாதாரணமாகப் பாடியிருந்தால், அந்த வெப்பு அதிகமாகத்தாக்க, அரசன் அழிந்திருப்பான் " பாண்டிமாதேவியின் திருமங்கலத்தைக்காக்கவும், குலச்சிறையின் பக்திக்காகவும், அரசன் மனம்மாறி சைவ நெறி நிற்கத்தக்கவனுதலாலும், தன் திருக்கரத்தினுலே திருநீறு பெறுவான் என்பதையும் அறிந்ததால் அவன் அழியாதிருக்க "பையவே" செல்லட்டும் எனப்பாடியருளினர் பிள்ளையார்.

பாண்டிமாதேவியார் தமது பொற்பில் பயிலு நெடுமங்கல நாண்பாதுகாத்தும்
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினுலும் அரசன்பால் அபராதம் உறுதலாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியினுலும் வெண்ணீறு வெப்பகலப் புகலிவேந்தர்
தீண்டியிடப் பேறுடையனுதலாலும் தீப்பிணியைப் "பையவே செல்க" என்றுர்.

அமணர் வைத்த தீ வெப்புநோயாகி அரசனைப்பிடித்துக் கொண்டது, தீவைத்தது தெரிந்து "சம்பந்தப் பிள்ளையாருக்கு என்ன ஆபத்தோ" என் மந்திரியும் அரசியும் கவன்றபோது, அரசனுக்குவெப்பு நோய் என்பதையறிந்து அரசனைக் காணச் சென்றனர். அரசனது உடலிலிருந்த வெப்பம் ஏதோ கனல் பொறி காற்றில் சிதறுவது மாதிரி அரண்மனையில் உள்ளவர் மீது சூடாகத் தாக்க அனைவரும் ஓடினர். குளிர்ந்த வாழைத் தண்டுகள் கூட உலர்ந்து தூளாகிவிட்டன. வைத்தியர்கள்

என்ன சிகிச்சை செய்தும் அரசன் நினைவின்றிக் கிடந்தான். சமணர்கள் மயிற்பீலி கொண்டு வந்து தடவி மந்திரித்தனர் மயிற் பீலி கருகியது. "அருகனே காவாய்!" எனக் கூறி நீர்தெளித்து மந்திரித்தனர். நெருப்பில் நெய் சொரிந்தமாதிரி அதிகமாயிற்று "ஒருவரும் அருகிலிருக்க வேண்டாம் செல்லுங்கள்" எனச் சமணரை விரட்டினுன் பாண்டியன். சமணர் செய்த தகாத செயல் இவ்வாறு நேர்ந்ததோவென ஐயமுற்ற அரசியும் மந்திரியாரும் "ஞான சம்பந்தப் பெருமான் வந்தால் இப்பிணி தீரலாம்" என்றனர். 'அரந்தை தீர்க்கும் அடியவர்" எனத் திருக்கூட்டச்சிறப்பின் குறித்தார். அது உண்மையென்பதை "ஞானசம்பந்தர் என்னும் நாமமந்திரமும் செல்ல - ஆனபோது அயர்வு தன்னே அகன்றிட" ப்பெற்ருன் பாண்டியன். "என்பிணியைத் தீர்த்து வெல்பவர் பக்கம் சேர்வேன்" என்ருன் பாண்டியன். "பாண்டிமாதேவியும் மந்திரியும் சென்று சம்பந்தப் பெருமானைக் கண்டதை

> ஞானத்தின் திருவுருவை : நான் மறையின் தனித்துணையை
> வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தைத்
> தேனக்கமலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்கும்
> கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்

எனவாய் மணக்கப் பாடுகிருர் சேக்கிழார். சமணர் செய்த கொடுஞ்செயலை எண்ணி நடுங்கிக் கண்ணீருடன் நின்ற அவர்களை நோக்கிய சம்பந்தர் "உங்களுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்ததோ? "எனவினவ, "அமணர் தங்களுக்குச் செய்த தீமையை எண்ணிக் கவலைப்பட்டோம். இப்போது அரசனுக்கு வெப்பு நோய்வந்துள்ளது" என்றனர். "அரசனது வெப்புநோயைத் தீர்த்து அவரது உயிரையும் எமது உயிரையும் காத்தருள வேணும்" எனவேண்டினர். "இறைவன் திருவுள்ளம் அறிவேன்" எனக்கூறித் திருவாலவாய் கோயில் புகுந்தார்.

## திருச்சிற்றம்பலம்.

காட்டுமாவதுரித்துரி போர்த்துடல்
நாட்டமூன்றுடையாயுரை செய்வஞன்
வேட்டுவேள்வி செயாவ மண்கையரை
யோட்டி வாது செயத்திருவுள்ளமே
வேத வேள்வியை நிந்தனே செய்துழல்
ஆதமில்லியமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதிமாதுடனுய பரமனே
ஞால நின்புகழே மிக வேண்டுந்தென்
ஆலவாயிலுறை யுமெம்மாதியே.

## திருச்சிற்றம்பலம்

அரண்மனேக்குச் சம்பந்தப்பெருமான் வந்தனர். மந்திரியிடம் சம்பந்தரை எதிர் கொண்டழைக்குமாறு கூறினுள். கூட இருந்த சமணர்கள் '' நம் சமயத்தை இப்படியா காப்பது'' எனப்புழுங்கி ''அரசனே! நாங்களும் அவரும் உன் நோயைத் தீர்க்க மந்திரிப்போம். அவர் நோயைத் தீர்த்தாலும், நாங்கள் தீர்த்ததாகச் சொல்லவேணும். அப்போது தான் நம் சமயத்தின் பெயர் விளங்கும்'' என்றனர். அரசன் மறுத்தான். ''வஞ்சனே [கைதவம்] பேசமாட்டேன்'' என்று கைதவன்] பாண்டியன் கூறினுன்.

சம்பந்தப் பெருமானேக் கண்ட அரசன் கையெடுத்து வணங்கி இருக்கை ஈந்தான். ஏற்கனவே'' ஞானசம்பந்தர் என்ற நாமம் கேட்டு......அயர்வு நீங்கிட'' ப்பெற்றவன் அவரைக் கண்களால் காண வெம்மை நோய் சிறிது நீங்கியது ''விழியுற நோக்கலாலே வெம்மை நோய் சிறிது தீர்ந்தது'' என்கிறுர் கவிஞர் பெருமான்.

''தங்கள் ஊர் எது எனப்பாண்டியன் கேட்க.

திருச்சிற்றம்பலம்

பிரமனூர் வேணுபுரம் புகலிவெங்குருப் பெருநீர்த்தோணி.
புரமன்னு பூந்தராய் பொன்னஞ்சிரபுரம் புறவஞ்சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவயம் உள்ளிடங்காதியாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்ற திருக்கழுமலம் நாம்பரவு முரே

திருச்சிற்றம்பலம்

எனப்பன்னிரண்டு பெயரும் வருமாறு சீகாழிப் பதிகம் பாடி யருளினர்.

திருச்சிற்றம்பலம்



# 'கந்தரநுபூதி' ஒரு கால்கண்ணுடி

வித்துவான் : வை திருஞானசம்பந்தன். ஈரோடு.

இயற்கையின் படைப்பில் தோன்றிய உயிரினங்களின் வளர்ச்சியால் மனித இனம் தோன்றிற்று. அம் மனிதனின் வாழ்க்கைக்காகப் பல பொருள்களும் படைக்கப் பெற்றன. அவற்றை வாய்ப்பிற்கும் வசதிக்கும் ஏற்றவாறு பயன்படுத்திக் கொள்வது மனிதனின் அறிவைப் பொருத்தது என்பது ஒரு சாரார் கொள்கை.

உலகம் தோன்றியது இயற்கை என்றுலும், படைக்கப்பட்ட பொருள்கள் மனிதனின் தேவைக்கு என்றுலும் அவற்றைப் பகுத்தறிவு கொண்டு பார்த்து, தேவையற்றவை இவை–தீங்கு தருபவை இவை–நலந் தருவன இவை என்று ஆராய்ந்தறிவது அவசியம் என்பது பிறிதொரு சார்புடையார் கொள்கை.

கண்டதே காட்சி கொண்டதே கோலம். மனிதனுடைய வாழ்நாள் மிகவும் குறைவு. எனவே பாவ புண்ணியங்கள் என்பவை மனிதன் எதிரி என்று கூறிக் காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவேண்டும் என்று வாழ்க்கையை எப்படியும் அமைத்துக் கொள்ளலாம் என்பது மற்றொரு சாராரின் கொள்கையாகும்.

நிலத்தைத் தோண்டினுல் ஒரு பக்கம் நீர் கிடைக்கிறது. மற்றொரு இடத்தில் எண்ணெய் கிடைக்கிறது. சில இடங்களில் தங்கம் கிடைக்கிறது. வைரம் நிலக்கரி கிடைக்கிறது. இவைகளெல்லாம் ஒன்றுகப் படைக்கப் பட்டிருந்தால் ஒன்றிற்கும் பயன்படாமல் போயிருக்கும். இப்படிப் பயனின்றிப் போகாமல் மனிதனுக்குப் பயன் படும் படியாகச் செய்தது இறைவன் படைப்பல்லவா? என்பதும் பலரின் கொள்கையாகும்,

இப்படிப்பட்ட கொள்கைகளைப் பல்லாண்டுகளாக நாடு இடையிட்டும்-தேசம் இடையிட்டும் வாழ்ந்த பெரியோர்கள் தங்கள் பட்டறிவின் மூலம் கண்ட உண்மைகளை மறைகள். துணைநூல்களான உபநிடதங்கள், புராணங்கன், சித்தாந்தங்க்ள், வேதாந்தங்கள் என்ற பெயரில் மக்களுக்குரிய ஒழுகலாறுகளை ஆக்கித்தந்தனர். இவைகள் காலத்தால் அழியாதன. குறுகிய காலத்தில் அழிந்து போகிற நாம் காலத்தால் அழியாத சாத்திரங்களைத் துணைக்கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுரையும் தெய்வத்துள் ஒருவனாக மதிக்கப்படுவதற்குரிய வழிகளைக் காணவேண்டும்.

சங்ககாலம் பொற்காலம் என்பதும், சங்கம் மருவிய காலம் சமயப்பூசல் கொண்டகாலம் என்றும் கூறினர். மேலும் சமயப்பூசல்களால் இசை மக்களின் சிற்றின்பத்திற் கேவழிவகுக்கின்றது என்று கூறி இசை நூல்களைச் சிதைத் தொதுக்கினர். ஆனல் சிற்றின்பமே முன்னினும் முதிர்ந்து முகிழ்த்தது. இதனையடிப் படையாகக் கொண்டே ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னே நமது தமிழகம் மட்டுமன்றி இந்தியாவே! ஏன்? உலகமே இச்சிற்றின்பத்தை நோக்கிச் சென்றது. வீரம் வீழ்ந்தது. அறம் அழிந்தது. இவ்வுலக வாழ்வில் பெறுகின்ற சிற்றின்பமே பேரின்பமகும். இதற்காகவே இவ்வுலகம் படைக்கப்பட்டது, என்று மன்னவனும் நம்பினன். மன்னவனே அவ்வழியாயின் மன்னுயிரைப் பற்றிச் சிந்திக்கவா வேண்டும். இப்படிப்பட்ட காமவெறியிலே சிக்கித் தவித்த போது அவர்களைக் காப்பாற்றிக் கடைத்தேற்றும் பொருட்டுச் சமயத்தின் சார்பில் அருளாளர்கள் தோன்றினர். அவர்களுள் ஒருவராகிய அருணகிரிநாதப் பெருமானல் அருளிச் செய்யப்பட்டு, முன்னியது முடிக்கும் முருகனின்-தமிழ்க் குமரனின் பேரருளை விளக்குவதற்கெழுந்த பாமாலையே காலக்கண்ணாடியாகிய “கந்தரநுபூதி”யாகும்.

அருணகிரிநாதப் பெருமான் பதினைந்தாம் நூற்றாண்டில் திருவண்ணாமலையைச் சிற்றரசனாக ஆண்ட

பிரபுடதேவன் காலத்தில் வாழ்ந்தவர். திருவண்ணமலை யிலுள்ள திருமுருகனுல் ஆட்கொள்ளப்பட்டுத் தமிழகம் மட்டுமன்றி இலங்கையையும் இமயத்தையும் கண்டு குமரனின் கோலத்தையுண்டு திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், வேல்விருத்தம், மயில் விருத்தம், கந்தரநுபூதி எனப் பாமாலைகளைப் பாடியருளினுர் இவற்றுள் முருகப் பெருமானின் அநுபூதிநிலை தனக்குக் கைவந்தபோது கடைசியாகப் பாடப்பட்டது கந்தரநுபூதி என்பர், சக்திவரப் பெற்றவனுகிய சம்பந்தண் டானின் சதியால் ஊனுடம்பை இழந்த அருணகிரிநாதர் கிளி வடிவத்திலிருந்துகொண்டே கந்தரநுபூதியைப் பாடினுர் என்றும் கூறுவர்.

எப்படியாகுலும் அளவில் சிறியதே யாகுலும் பொருளில்—அநுபூதி நிலையில்—பேரின்ப நிலையில்—மந்திரமகிமையில் கந்தரநுபூதி பெரியது. அருணகிரிநாதர் தாம் பெற்ற பிறவா நெறியை—பேரின்ப நிலையை—அநுபூதிச் செல்வத்தை—ஆசாநிகளம் துகளாயினபின் பேசா அநுபூதி பிறந்த பெருவாழ்வை ஒவ்வொரு பாடலிலும் நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து அன்பு நிறைந்து ஊற்றெழுங்கண்ணீரால் உடம்புநனைந்து கருங்கல் மனமுங் கரைந்துருகப் பாடியுள்ளார். எனவே தாயுமான அடிகளும்

> "கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன
> எந்தையருள் நாடியிருக்கும் நாள் எந்நாளோ?"

என்று வியந்து பாராட்டியுள்ளார்.

கந்தன் என்ற சொல்லுக்குப் பகைவர்களின் வலிமையை வீழ்த்துபவன், ஒன்று சேர்க்கப்பட்டவன், ஆன்மாக்கள் உய்வதற்கும் பற்றுக் கோடானவன் என்று பல பொருள் கொள்ளலாம். ஆயினும் சிவன் உமையை அழைத்துக்கொண்டு போய் சரவணப் பொய்கையில் ஆறு உருவங்களாய் அமைந்த அழகினைக் காட்டியபோது அம்மையார் ஆறினையும் ஒன்ருக்கிக் 'கந்தன்' என்று பெயர் சூட்டிய நிலையை கந்தர்கலி வெண்பாவில்

"நறுநீர் முடிக்கணிந்த நாதன் — குறுமுறுவல்
கன்னியொடுஞ் சென்றவட்குக் காதலுருக்காட்டுதலும்
அன்னவள் கண்டவ்வுருவமாறினையும் — தன்னிரண்டு
கையாலெடுத்தணைத்து 'கந்தன்' எனப்பேர் புனைந்து"

என்பதால் கன்னிகந்தன் எனப் பெயர் சூட்டிய பாங்கு கற்றோர்க்குக் களிபேருவகை தருவதாகும்.

இனி அநுபூதி என்பதற்கு உடன் ஒன்றியநிலை எனப் பொருள் கொண்டு கந்தனுடன் உயிர் ஒன்றுந்தன்மையை உணர்த்துவதாகும். சீவான்மா பரமான்வாவுடன் ஐக்கியமாகிய நிலையாகும். இதனை அத்துவிதநிலை என்பர். எனவே கந்தரநுபூதி என்பதற்குக் கந்தனால் அடைந்த அநுபூதி நிலை என்று விரித்துப் பொருள் கொள்ள வேண்டும். அருணகிரியார் அடைந்த அநுபூதி நிலைக்குக் கந்தன் கருணை காரணமாயிற்று.

பகலில் சூரியன் வெளிப்படுவதால் அவ்வொளியின் மூலம் நமது கண் பொருள்களைக் காண்கிறது. ஆனால் இரவில் சூரியன் ஒளியில்லை. ஆனல் கண் இரவில் விழித்திருந்தாலும் எப்பொருளையும் தானே காணமுடிவதில்லை. அப்படிக் காண்பதற்கு ஒளிதேவைப்படுகிறது அதுபோல் பேரின்ப நிலையை அடைவதற்குக் கந்தன் அருள் இருந்தால் தான் அநுபூதி நிலையை அடையமுடியும். எனவே கந்தனால் அடைந்த அநுபூதிநிலை என்பது பொருத்தமாகும்.

இளமையிலேயே பெற்றோர்களை இழந்து தமக்கையாரின் ஆதரவில் வாழ்ந்துவந்த அருணகிரியார் தென்மொழி வடமொழியாகிய இரண்டிலும் கற்றுத் துறைபோகியும் காமநெறிப்பட்டுச் சிற்றின்பத்தால் சிந்தைநைந்து அதனையே பேரின்பமாகக் கொண்டு வாழ்ந்தார் என்பதை அவர்பாடிய திருப்புகழ் முதல் கந்தரநுபூதி முடியவுள்ள பகுதிகளிலிருந்து அகச்சான்று காட்டித் தம் கொள்கைகளைச் சிலர் நிலை நாட்டுவர் இக்கொள்கை ஏற்றுக் கொள்ளக் கூடியதன்று. ஏனென்றால் சமய நெறியில் நின்று தாம் பெற்ற இன்பத்தை மற்றவர்களும்

பெற்றுய்யவேண்டும் என்ற விருப்பத்தால, மக்களிடம் படிந்து கிடைக்கின்ற மாயாமலத்தைச்-சிற்றின்ப நிலையைத் தங்கள் மேல் ஏற்றித் தாங்களே அப்படிக் கிடப்பதாகவும் அவற்றைத் தடுத்து எங்களை ஆட்கொண்டு அருள் வீராக என்று வேண்டுவதும் இயற்கை என்பதைச் சைவ சமயப் பெரியோர்கள் பாடிய பாக்களை ஆராய்ந்து பார்த்தால் தெற்றென விளங்கும். அம் முறையில்தான் அருணகிரியாரும் - அவர் காலத்தில் மக்கள் நிலையை நன்ருக உணர்ந்து அவர்களை உய்விக்க வேண்டி அவர்கள் செய்த பாவங்களைத் தம் மேல் ஏற்றிப் பாடியுள்ளனர் என்பதே தெளிந்த முடிவாகும்.

அருணகிரிநாதர் மணமாகாதவர் என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படியிருக்க கந்தரநுபூதியில் நாற்பதாவது பாடலில்,

> "வினையோட விடுங்கதிர்வேல் மறவேன்
> மனையோடு தியங்கி மயங்கிடவோ"

என்று வருவதைக் கொண்டு அவருக்கு மனைவி உண்டு என்பதை ஏற்றுக் கொள்ள முடியுமா? உலகியல் நிலையில் மற்றவர்களின் நிலைக்காகத்தான் பரிந்து பேசுகின்ருர் என்பதே ஏற்புடைத்தாகும். மேலும்:

> "சிங்கார மடந்தையர் தீநெறி போய்
> மங்காமல் எனக்கு வரந்தருவாய்"

என்று 34-வது பாடலிலும்,

> "மட்டூர்குழல் மங்கையர் மையல்வலைப்
> பட்டுசல் படும்படர் என்ருெழிவேன்"

என்று 9-வது பாடலிலும்,

> "கூர்வேல் விழிமங்கையர் கொங்கையில்
> சேர்வேன் அருள்சேரவும் எண்ணுமதோ"

என்று 24-வது பாடலிலும், தன்னையே உளப்படுத்திச் சிங்கார மடந்தையரின் தீயநெறியில் சிக்கி, மட்டூர் குழல் மங்கையரின் மையலில் மயங்கி, கூர்வேல் விழிமங்கை

யரின் சொங்கையில் மூடியிருக்கும் நான் உனது அருள் சேரவும் எண்ண முடியுமா? என்று சவால்விட்டுக் கேட்கின்ருர். இதனை உண்மை என்று ஏற்றுக் கொண்டால் உலகம் காமுகன் என்றன்ருே இயம்பி நிற்கும். இதனையும் நாம் ஏற்பதற்கில்லை என்பதைப் பின்வரும் அகச்சான்று மூலம் அறியலாம்.

காரைக்காலம்மையார் தாம் பாடிய சிவபெருமான் திருஇரட்டை மணிமாலையில் 13-வது பாடலில்,

"நினையாது ஒழிதிகண்டாய் நெஞ்சமே! இங்கோர் தஞ்சமென்று
மனையாளையும் மக்கள் தன்மையும் தேறிலோர் ஆறுபுக்கும்
நனையாச் சடைமுடி நம்பன் நம்தாதை நொந்தாத செந்தீ
அனையான் அமரர்பிரான் அண்டவாணன் அடித்தலமே.

என்று அருளியுள்ளார்.

சங்கை தலையில் தங்கியும் நனையாத சடாமுடியை யுடையவரும், நமக்குத் தந்தையும், செந்நிறமான திரு மேனியையுடையவரும், தேவர்கட்குத் தலைவரும், எல்லா அண்டங்களையும் தனக்கு இருப்பிடமாகக் கொண்டவரு மாகிய சிவபெருமானின் திருவடிக் கமலங்களைப் பற்றுக் கோடாகக் கொண்டு உலக இன்பங்களையே பெரிதாகக் கொண்டு வீணே காலத்தைக் கடத்துகிருயே இது நியாயமா என்பது கருத்தாகும்.

இதிலிருந்து காரைக்காலம்மையாருக்கு மக்கள் இருக் கலாம். பெண்ணுக்கு மனைவி எப்படி வாய்க்க முடியும். எனவே அம்மையார் உலகிலுள்ள மற்றவர்களின் செயலைத் தம் செயல் போல் கூறியுள்ளார் என்பதை இதன் மூலம் ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறுவழி யில்லை. அதுபோல் அன்புக்கு, அருளுக்கு, வாக்கிற்கு, கருணைக்கு இருப்பிடமான அருணகிரியார் உலகியல் நிலை யைத் தம்மேல் ஏற்றிப் பாடியுள்ளார் என்பதை ஏற்கத் தானே வேண்டும்.

இறுதியாக அருணகிரியார் தமது மனமாகிய தாமரை மலர்களை அன்பான நூலினுல் மாலையாக தொடுத்து நாவினுல் அழகுபடுத்தி ஞானம் என்கின்ற நறுமணங் கமழ்ந்து ஒளிவீசச் செய்து அறிவு என்கிற வண்டு அம் மலர் மாலைகளில் ஒலித்துக் கொண்டிருக்கும்படியாக அகரம் முதல் க்ஷகரம் ஈருகவுள்ள ஐம்பத்தொரு எழுத்துக்களைப் போல் ஐம்பத்தொரு பாடல்களைப் பாடி முருகா! செந்தாமரை மலர் போன்ற திருவடிகளில் படைக்க வேண்டும். அதுவே எனது பிறவிப் பயன்என்று பாடிய திருப்புகழே கந்தரநுபூதி ஐம்பத்தொரு பாடல்களை யுடையது என்பதற்குச் சான்ருகும்.

> ஆசைகூர்பத்தனேன் மனோபத்மமான பூவைத்து—நடுவேயன்
> பான நூலிட்டு நாவிலே சித்தமாகவே கட்டி—ஒருஞான
> வாசம்வீசிப் பிரகாசியா நிற்ப மாசிலோர்புத்தி—அளிபாட
> மாத்ருகா புஷ்பமாலை கோலப் பிரவாள பாதத்தில் அணிவேனே?

முருகனுடைய திருவடிகளையடைய வேண்டும் என்று விரும்புகின்ற செந்நெறிச் செல்வர்களாகிய நாம் கந்தரநுபூதி நிலையை அடைவோமாக.

குறிப்பு:— திங்கள்தோறும் குமரகுருபரனில் இவ்வாசிரியரின் கந்தர்அநுபூதி ஒன்று அல்லது இரண்டு பாக்களுக்குரிய தெளிவுரை, விளக்க உரை கட்டுரை வடிவில் வெளிவரும்.

— ஆசிரியர்.

# கங்கைச்செல்வியும் காவிரிச் செல்வியும்

த. பத்மாவதி (கணக்கர்)
மாவட்டக்கருவூலம், தஞ்சாவூர்.

உலகில் உயர்வளிக்க விரும்பும் யாவற்றையுமே நம் ஆன்ருேர் தாயாக உருவகப் படுத்தினர் பூமியையும், நதியையும், செல்வத்தையும் இன்னபிறவற்றையும் பெண்ணுய்ப் பாவித்து பெருமைப்படுத்தியதோடமையாது பூசிக்கவுமே செய்தனர். ஆண்களுக்கு 132 அதிகாரங் களை வகுத்த வள்ளுவப்பெருந்தகை பெண்ணினத்திற்குப் படைத்தது ஒரே அதிகாரம்தான் ஏன்? இந்த ஒரு அதிகாரத்திலுள்ள நீதிகளை பின்பற்றினுலே போதும். பெண் போற்றற்குரியவளாகிவிடுவாளென நினைத்தார் போலும்!

வீட்டினுள் வாழும்வரை ஒரு பெண்ணை எந்த தீய சக்தியும் அணுகுவதில்லை—அதுமட்டுமல்ல அணுகவும் முடியாது. ஆனுல் நிலைதாண்டி வந்த பெண்களுக்குத்தான் எத்தனை எத்தனை சோதனைகள் சீதை, திரௌபதி, சாவித்திரி, தமயந்தி, நளாயினி, கண்ணகி என பட்டியல் போடத்தொடங்கின் விரியும். நிலைதாண்டியபின் அவர்கள் பட்ட துன்பங்களை நினைக்கின் "நெஞ்சக் கனகல்லும் நெகிழ்ந்துருகும்" ஆனுல் அத்துன்ப காலங் களிலும் நிலைதவருது தன்னையும் தன்னைக்கொண்டவனின் புகழையும் காத்து நின்றதனுல் அன்ருே இவர்கள் மண்ணுலகேயன்றி விண்ணுலகிலும் வணக்கத்திற்குரியோ ராயினர். இன்பத்தின் எல்லையிலும் துன்பத்தின் முடிவிலும் வாழ்ந்தகாலத்தும் அறம் பிழையாது வாழ்ந்து நமக்கு வழி காட்டினுர்கள் என்பதை கீழ்வரும் இரு நிகழ்ச்சிகளால் அறியலாம்.

சீதை: (இன்பத்தின் எல்லை) தன்துன்பத்திற்கெல்லாம் மூலகாரணனாய் இருந்த வரையினை எடுத்த தோளனும், வாரணம்பொருதமார்பனுமான தசக்கிரீவன் தன் கணவனால் பெருவாழ்வளிக்கப்பட்டுவிட்டான் — தன் கற்பு அவனைச் சுட்டுவிட்டது என்ற செய்தியை வாயு புத்திரனின் வாயிலாகக் கேட்டு இன்பத்தின் உச்சத்தில் நிற்கும் தேவியிடம் அஞ்சனை குமாரன் ஒரு வரம் கேட்கிறான் "தாயே! நான் முன்பு உனைத்தேட இங்கு வந்தபோது இலங்கைக்கு அழலூட்டினேன் ஆனால் தாங்கள் தங்கியிருந்த ஒரே காரணத்தால்-சிவலிங்கத்தின் மீது ஓடும் எலியைத் தடியால் அடிக்கமுடியாதெனு மாப் போலே—இந்த அசோக வனம் மட்டும் தப்பிய தோடன்றி தங்களைச் சூழ்ந்து கொடுமைப்படுத்திய இவ்வரக்கியரும் தப்பிவிட்டனர். தயைகூர்ந்து இப்போது உத்திரவளித்தால் அன்று விட்டுச்சென்ற காரியத்தை இன்று முடிப்பேன்" என்றார். இயற்கையாய் நாமென்றால் என்ன சொல்வோமோ. ஆனால் பத்துமாதங்களையும் பத்து யுகங்களாய்க் கழித்த அச்சிறை இருந்த செல்வி சொல்கிறாள்.

"அப்பா! என் வினையால்நான் அவதியுற்றேன் அதற்கு இவர்கள் காரணமல்ல. அதுவுமன்றி கூனியின் கொடியரல்லரே இவர்"

இதன் பொருள்தான் என்ன? அயோத்தியில் எங்கள் உப்பைத்தின்று எங்கள் குடும்பம் முழுமைக்குமே தாங்கொணாத்துயர்தந்து எஜமானன் குடும்பத்திற்கு தீங்கிழைத்து விட்டவளான கூனியை விட எஜமானனை இராவணனின் ஆணைப்படி தன்னைத்துன்பப்படுத்திய இவ்வரக்கியர்கள் எஜமானவிசுவாசத்தையும், அடிமையின் தத்துவத்தையும் நன்குணர்ந்தவர்கள் என்பதே.

ஆகையால் இவர்களை மன்னித்து விடு எனகிறாள் எந்தநேரத்தில்? அண்டர்நாயகனும் அயோத்தி நாயகன் வென்றுவிட்டான் எனும் சந்தோஷத்தின் எல்லையில்— தலைகாலே புரியாதென் பார்களே—அந்த நேரத்தில்

ஜனகனின் செல்வி நீதி பேசுகிருள். அவளாவது சாட்சாத் மஹாலட்சுமி—தேவதேவனின்தேவி அதுவும் இன்பத்தின் எல்லே அப்போது கங்கைச் செல்வி தர்மம்பேசினுள். ஆனுல் இனி நாம் காணப்போகும் காவிரிச்செல்வியோ?

கண்ணகி: (துன்பத்தின் எல்லே) சோழ நாட்டில் தோன்றிய ஒரு சாதாரணப் பெண். அன்று வரை வெளியுலக வாழ்விலே தான் மட்டும் தனித்து நின்று யாருடனும் பேசியறியாதவள் மட்டுமல்ல தவிர-அவனது வரவுக்காகக்கூட — வேறுதெய்வங்களே வணங்கியுமறி யாதவள். ஆனுல் இன்ருே தன் ஊர்விட்டு, உற்ருர் உறவினரைத்தான் விட்டு கணவன் அடியொற்றி வேற்று நாடு சேர்ந்து, அங்கு அநீதிக்களத்திலே கோவலனேப் பலி கொடுத்து அரச அவையிலே நீதிபேசி பாண்டியனின் கொடுங்கோலே உணர்த்திவிட்டு மதுரையின் வீதியிலே இருட்டிலே நடக்கிருள்.

மாசறு பொன்னே, வலம்புரிமுத்தே , காசறுவிரையே கரும்பே, தேனே என அன்று கோவலனுல் வர்ணிக்கப் பட்ட அம்மெல்லியலாள்தான் இன்று கூந்தல் அவிழ்ந்து குங்குமம் கலந்து கொற்றவையாய் பிடாரியாய், இறைவனே ஆடல்கண்ட அணங்காய் சூர் உடைக்கான் உகந்த காளியாய், தாருகண்பேர் உகம்கிழித்தபெண்ணுய் காண்பார் அச்சமுறும் கோலத்தோடு நடக்கிருள்.

அவள் முன்தோன்றும் தீக்கடவுள் அவள தனக்கிடும் கட்டளே யாதெனக் கேட்கிருன் "கணவனே இழந்தோர்க்கு காட்டுவது இல்" என்பார் இளங்கோவடிகள் அப்படிப் பட்ட ஈடு காட்டமாட்டா எல்லேக்கோட்டிலே நிற்கும் கண்ணகி—மனம் நொந்துநைந்த நேரத்திலும் அறத்தோடு ஆணேபிறப்பிக்கிருள் என்ன ஆச்சரியம்! ஆணேயா அது! ஒரு பட்டியலேயே அல்லவா அக்கடவுள் முன் வைக்கிருள் எப்படி;- "பார்ப்பாரறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்மூத்தோர் குழவியெனு மிவரைக்கைவிட்டுத்தீத் திறத்தார் பக்கமே சென்று சேர்க" என்று.

இன்பத்தின் எல்லையில் நீதிபேசிய பாற்கடல் நீங்கிய பத்தினியையும் விட துன்பத்தின் எல்லையிலும் அறம் பிழையாது ஆணையிட்ட கண்ணகி ஒருபடி மேம்பாடுடையவள் ஆகி "கங்கையிலும் புனிதமாயகாவிரி" என்பதை சொல்லாமல் சொல்லிவிட்டாள்.

"புகழ் புரிந்து" எனத்துவங்கும் குறளிலே வள்ளுவர் சொல்வார் ஒருவன் தன் மனைவியின் நன்னடத்தையால் தான் தலைநிமிர்ந்து நிற்க முடியுமென்று. தானத்தில் சிறந்த நிதானத்தைப் பெண்கள் என்நிலையிலும் மறக்கலாகாதென் பதற்கு மேற்கூறிய இரு உதாரணங்களே போதும. பெண் தான்பிறந்த வீட்டில் வாழ்வது கொஞ்சநாள் புகுந்த வீட்டிற்கு பெருமை சேர்ப்பவளாய் வாழவேண்டும். வைதேகியும் கண்ணகியும் தங்கள் நிதான புத்தியால் பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் பெருமை தேடித் தந்தனர்,

இப்படிப் பெண்கள் வாழ்வாங்கு வாழ்வார்களேயானல் அவள் கங்கைச்செல்வியோ காவிரிச் செல்வியோ யாராயினும் அவர்களுக்கு "சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷாபரணக்கிருபரகனுன" அந்த செந்திற்பதிவாழும் செவ்வேல் தன் இன்னருளை பூரணமாய் அளித்துக் காப்பானென்பதில் ஐயமில்லை.

செந்திலாண்டவனின் திருவடிகளே சரணம்:

சிவ சிவ]

# இது சரியா?

திருமதி, உமாதேவி பத்மநாபன் அவர்கள்,
9/37 திரௌபதி அம்மன் கோயில் தெரு, அரியாங்குப்பம்
புதுவை—7 (605007)

தலைவியின் மனக்கலக்கத்தைக் காணும் தோழி அவளுக்கு ஆறுதல் கூறுகின்றாள். தவறுணர்ந்து மனம் வருந்துபவர்களைத் தெய்வம் தண்டிக்காது. மகிழ்ந்து அரவணைக்கவே செய்யும் என்பர் பெரியோர். எனவே நீ வருந்தாதே, நீ மனமொப்பி நம்முடைய அரும் பெருங் கடவுளான குமரனை வசை பாடவில்லையே. ஏதோ மனவேதனையிலும், ஆற்றாமையிலும் சில சொற்கள் பிதற்றினாய். கருணைப் பெருங்கடலான அவன் அவற்றை மனதில் கொள்ளமாட்டான். உன் வருத்தத்தைப் போக்கி அருள் செய்வான். எனவே கலங்காதே, மேலும் நீ யார்? என்பதை எண்ணிப்பார். நீ சாதாரண குலத்தில் பிறந்தவளா? அவனுக்கு ஒருவிதத்தில் நீ உறவினள் ஆக வேண்டியவள் தான். எனவே தன்னுடைய உறவினளான உனக்கு அவன் உறுதியாக உதவி செய்வான். செய்ய முன்வருவான் என்று கூறுகின்றாள்.

தோழியின் பேச்சு தலைவிக்கு புதிராக இருக்கின்றது. அவனோ ஒப்பற்ற தனிப்பெருங் கடவுள். நாமோ சாதாரண, எளிய, கானவர் குலப்பெண். போயும், போயும் என்னைப் போய் அவனுக்கு உறவினள் என்று கூறுகின்றாளே இவள். இவளுக்குசித்தம் கலங்கி விட்டதா? அறிவு மயங்கி விட்டதா? மனம் குழம்பி விட்டதா? என்றெல்லாம் ஐயப்படுகிறாள் தலைவி. அவள் மனதில் நிழலாடிய எண்ணங்களை முகத்தில் படிக்கும் தோழி, தன்

விளக்கத்தைத் தொடர்கிருள். என்ன! உனக்குப் புரியவில்லையா? நீ எப்படி அவனுடைய உறவினள் ஆவாய்? என்று தானே சிந்திக்கின்ருய்? அவனுடையதுணைவியருள் ஒருத்தியை நீ மறந்து விட்டாயா? அவளை, அவளுடையக் குலத்தைப்பற்றி நீ சற்றும் சிந்திக்கவில்லையா? அப்படி ஒருவேளை அவன் முனிவனேயாயின், அவனிடம், நின் துணைவியான குறமகள் வள்ளி இருக்கின்ருளே அவள் எம்முடையக் குலமகள். அவளுடன் நின் இரு திருவடிகளையும் தொழுகின்ருேம். என்று பணிவோம். அவளுக்கு அருளும் போது, அதே குலத்தவளான உனக்கு மட்டும் அருள் செய்யாதிருப்பதுநியாயமல்லவே. எனவே உறவைக்கூறி, உரிமைக்குரல் எழுப்பி அவனுடன் வாதாடுவோம் என்று கூறுகின்ருள். முருகனின் துணைவி தம் குலத்தவள் என்ற பெருமிதம் அவளிடம் நிறைய இருப்பதால் உறவை நிலை நாட்ட விரும்புகின்ருள் அவள். குறமகளை அடையகந்தன் பட்டபாடு உலகம் அறிந்ததல்லவா? அதனுல் தானே அருணகிரியார், அவனைப் பாடிப் புகழ்ந்து பணியும் போதெல்லாம்,

"பரிசை முழக்கமிகு மழைதவழ் குறிச்சி தொறும்
மகிழ்குரவை யுட்டிரியும் வேடிக்கை காவலனும் வேடுவனும்"
"வரிசிலை மலைக்குறவர் பரவிய புனத்திதனில்
மயிலென இருக்குமொரு வேடிச்சி காவலனே"
"மருவளர் அடவி வனிதையர் பரவ
பரகத இதனில் இருப்பாள் கணவா"
"வனசரர் மரபினில் வருமொரு மரகத
வள்ளிக்கு வாய்த்த பெருமாளே"
"புனமுற்ற குறத்திருவைப் புனற் பொற் புயவீரா"
"குறத்தி யிறைவனை நிறைத்து மலரடி
குறித்து வழிபடு குணத்தை யுடையன"

"தழை உடுந்த குறமகள் மணக்கும் அறுமுகன்"
"தழை உடுத்த குறத்தி"
"மேவிய புனத்திதனில் ஒவியமெனத் திகழு
மேதகு குறத்தி திரு வேளைக்காரனே"

என்று பாடிப் பரவுகின்ருர். எனவேதான் தோழியும் வள்ளி நாயகியை நம்குலமகள் என்று கூறுவதோடு. வள்ளி நாயகனிடம் உரிமைபற்றிப் பேசவும் துணிகிருள்.

குறமகள் அவள்எம் குலமகள் அவளொடும்
அறுமுக ஒருவ!நின் அடியிணை தொழுதேம்
துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்
பெறுகநல் மணம் விடுபிழைமணம் எனவே

என்னும் தோழியின் கூற்று நயமுடன் விளங்குகின்றது. பக்திக்கு, நம்முடைய அன்புக்கு இரங்கான் எனில், உரிமையிருக்கின்றதே. அதனை எதற்காக விடவேண்டும்? உரிமையோடு, நமக்கு சேரவேண்டியது என்ற நியாய வுணர்வுடன் கேட்டுப்பெறுவோம். நாம் அவனுக்கு அயலார் இல்லையே. உறவு முறைதானே. எனவே கேட்பதை அவன் கொடுத்தாக வேண்டும். அதுதான் மரபும்கூட. எனவேதான் அவன் உறவு முறையைச் சுட்டிக்காட்டி, உரிமைக்குரல் எழுப்புகின்றாள். குறவர் தம் மகளார், மலையர் தம் மகளார் என்றெல்லாம் முன்பு பொதுவாகக் குறிப்பிட்டவள் இப்போது அழுத்தந்திருத்தமாகத் தங்களுக்கும் அவனுக்குமிடையே உள்ள உறவையும். அதனால் விரும்பியதைக் கேட்கும் உரிமையையும் சுட்டிக்காட்டும் வகையில் ''குறமகள் அவள் எம்குலமகள்'' என்று மிக, மிக அழுத்தமாகக் குறிப்பிடுகின்றாள். பெயரையோ, அல்லது மங்கை, நங்கை, நேரிழை என்றெல்லாம் அலங்காரமாகவோக் கூறாமல் அப்படியே. உள்ளதை உள்ளவாறே கூறிவிடுகின்றாள். அதோடுவிடாமல் உன்னிடம் வேண்டி நிற்கின்றாளே அவளும், அவளுக்காகப் பரிந்து பேசும் நானும், உன் துணைவியின் குலத்தில் வந்தவர்கள்தான் என்பதை யறிவிக்க, ''எம்குலமகள்'' என்று பன்மையில் கூறி உறவை நிலை நாட்டுகின்றாள். உறவுதந்த உரிமையால் துணிவுடன் குமரப் பெருமானிடம் வேண்டி விரும்பியதை அடைகின்றார்கள். தோழியின் கூற்று தலைவிக்கு மட்டுமல்ல, உலகில் உள்ள எல்லா மக்களுக்குமே சேர்த்துக் கூறப்பட்டதேயாகும். இறைவனிடம் பக்தி வேண்டும், அன்பு வேண்டும், அச்சம் கூடாது. அஞ்சும் மனம் இறைவனிடம் ஈடுபாடு கொள்ளாது. உரிமையுடன் தேவைகளைக் கூறி, கேட்டுப் பெறவேண்டும்; அந்த உரிமையும் இடையறு பக்தியால், பக்தி முதிர்ந்த

காதலால் எழவேண்டுமேயன்றி, கடனுகக் கேட்டுப் பெறக் கூடியதல்ல. அவ்வாறு கடன் கேட்டுப் பெறுவதும் இயலாத செயல். உழைத்த ஒருவனுக்கு, அந்த உழைப்பிற்கேற்ற ஊதியம் கேட்க உரிமையுண்டு, அதைக் கொடுக்காவிடில், எஜமானனை வற்புறுத்திக் கேட்க உரிமையுண்டு. அதற்கேற்ற அதிகாரமும் அவனுடைய வஞ்சனையற்ற உழைப்பின் அடிப்படையில் கொடுக்கப்பட்டதாகும். அப்படி உழைத்தவனுக்குத் தக்க சன்மானம் கொடுக்கக் கூடிய கடனும், கடமையும் முதலாளிக்கு உண்டு. உழைக்காதவனுக்கு எவ்வாறு இந்த உரிமையும், அதிகாரமும் கிடையாதோ, அவ்வாறே அவனுக்குத் தக்க ஊதியம் கொடுக்கும் பொறுப்பும் முதலாளிக்கு கிடையாது. அதைப் போலவே, ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும்'' அடியாருக்கு இந்த உரிமையுண்டு. அவர் விரும்புவதையருளும் கடமை இறைவனுக்கு உண்டு. நாவுக்கரசரிடம் இந்த உரிமை இருந்ததை அவர் பாடல்களில் பலவற்றில் காணலாம் அவரைப் போலவே நாமும் இறைவன்பால் உரிமைக் குரல் எழுப்பிப் பெறவேண்டிய மனப்பாங்கினையடைய வேண்டும். அதற்கு ஆழ்ந்த பக்தியையும் மாருத அன்பையும், இறைவனிடம் கொள்ளவேண்டும். அதனைப் படிப்படியாக அடையவேண்டும். அந்த பக்குவம் சில நாழிகைகளிலும் பெறலாம் ்ில நாட்களிலும் பெறலாம். ஏன் சில வருடங்கள் கூட ஆகலாம். அதற்கு ஆத்மதாகம் வேண்டும். இடையரு முயற்சியும், உழைப்பும், ஆர்வமும் வேண்டும். 'எல்லாம் நினதே' என்று பொறுப்பை இறைவனிடம் விட்டுவிட்டால், வேறு வழியின்றி அவன் அந்தப் பொறுப்பை ஏற்று முடிக்கும்படியாகவே ஆகிவிடும்

(தொடரும்)

சிவ சிவ]

# அருள்மொழி அமுது

திரு, ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119—கீழ இரண்டாம் வீதி, புதுக்கோட்டை —1.

## 34. கழுமலமுது பதிக்கவுணியர்

### G. சைவம் தழைத்தது!

திருச்சிற்றம்பலம்

சம்பந்தப் பெருமான் தலைமாட்டில் அமர்ந்தது கண்டு பெருமையால் உந்தப்பட்ட சமணர்கள் தங்களது நூல்களை யெல்லாம் கூறி, சூரியனை மேகங்கள் சூழ்ந்து கொண்டாற் போல் சூழ்ந்துகொண்டனர். பாண்டிமாதேவிநடுங்கினாள். "இவர் பலர் சம்பந்தப் பெருமானோ ஒருவர். எனவே முதலில் வெப்பு நோயைத் தீர்ப்பதில் முயலுங்கள். மற்ற விவாதங்கள் பின்னால் ஆகட்டும்" என்றனர். பாண்டிமாதேவி நடுங்குவது கண்ட சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

மானினேர் விழிமாதராய்! வழுதிக்கு மாபெருந்தேவி! கேள்!
பானல்வாயொரு பாலனீங்கவன் என்றுநீ பரிவெய் திடேல்!
ஆனைமாமலை யாதியாய இடங்களில் பலஅல்லல் சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் திருவாலவாயரன் நிற்கவே.

திருச்சிற்றம்பலம்

உடற் கூற்றின்படி இடப்பாகம் பெண் பாகமானபடியால் ஆண் மக்களுக்கு அப்பகுதியில் பற்றிய நோய் எளிதில் தீர்க்கக் கூடியது. வலப்பக்கம் ஆண் பாகம். அப்பக்கம் வரக்கூடிய நோய் சுலபமாக தீர்க்கக் கூடியது அன்று. உடற்கூறு அறிந்த வல்லுணர்களாகிய சமணர்கள், வலிய பகுதியான வலப்பாகத்தின் நோயைத் தீர்க்குமாறு சம்பந்

தரிடம் விட்டு எளிய பகுதியைத் தாம் தீர்ப்பதாகக் கூறினர். சம்பந்தரும் இணங்கினர்.

சமணர்கள் வலது பாகத்தில் மயிற்பீலி கொண்டு தடவ, நோய் அதிகரித்தது. சம்பந்தப் பெருமான் தனது விபூதிப்பையினின்றும் திருநீற்றையள்ளி,

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு: வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு: துதிக்கப்படுவது நீறு:
தந்திரமாவது நீறு; சமயத்திலுள்ளது நீறு:
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

திருச்சிற்றம்பலம்

வலப்பக்கம் நோய் நீக்கம் பெற்று, இடப்பக்க ம் நோய் அதிகமாயிற்று. ஒரு பக்கம் இன்பமும் ஒரு பக்கதுன்ப முற்ற மன்னவன் பேசுகிருன்.

மன்னவன் மொழிவான் "என்னே! மதித்த இக்காலமொன்றில்
வெந்நரகொரு பாலாகும்! வீட்டின்பம் ஒரு பாலாகும்
துன்னுநஞ்சொரு பாலாகும்! சுவையமுதொருபாலாகும்!
என் வடிவொன்றிலுற்றேன்! இருதிறத்தியல்புமென்பான்,

சமணர்களைத் தன்னிடம் நிற்கவேண்டாமென விரட்டிய மன்னவன் வலது பக்க நோயையும் தீர்க்குமாறு சம்பந்தப்பெருமானை வேண்டினன். சம்பந்தப்பெருமான் வலப்பாகப்பிணியும் தீர்த்தருளினர். இதற்கும் திருநீற்றுப் பதிகமே பாடினர் என்பர்.

மகிழ்ச்சி கொண்ட மந்திரியாரும் பாண்டிமாதேவியும் சம்பந்தரின் திருவடிகளில் வணங்கி "தங்களிடம் இன்று நேரில் பேசும் பாக்யம் பெற்றதால் பெருமையடைந்தோம். தங்களுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருந்தால் நாங்கள் இறந்திருப்போம். அது நேராது. எனவே மீண்டும் பிறந்ததாகவே எண்ணுகிருேம். எங்கள் அரசர் இனிச் சைவ சமயத்தைத்தழுவி பிறவாத மேன்மையடையப் போகின்ருர். எனமகிழ்ந்து பேசினர். அரசனும் சம்பந்தரை வணங்கினன்.

மந்திரத்தில் தோல்வியடைந்த சமணர்''. தீயையும் தண்ணீரையும் தமது மத்திரத்தால் அடக்கும் சக்தி பெற்றவர். தீயும் தண்ணீரும் ஜடப்பொருள்கள். அவற்றை அடக்கிவிடலாம், அரசன் உயிருள்ளவனுதலால் மாறிவிட்டான். ஒரு முறை நமது மந்திரம் தீயிடம் பலிக்க வில்லை. தண்ணீரிலாவது வென்றுபார்ப்போம்'' என எண்ணினுர். தாம்ரவியதீயே அரசனை வெப்பு நோயாகத் தாக்கியது எனச் சமணர்கள் அறியவில்லை.

''இருவருடைய மந்திரங்களையும் எழுதித் தீயிலிடு வோம். வேவாத ஓலையுடையவரின் கட்சி வென்றதாகக் கொள்வோம்'' என்றனர். அரசனும் ஒப்புக் கொண்டான். சம்பந்தரும் இசைந்தார். பெருந்தீ மூட்டப்பெற்றது.

தீயிலிடுவதற்குச் சம்பந்தப்பெருமான் புதுப்பதிகம் பாடவில்லை. எப்பதிகம் பாடினுலும் பலனுண்டு என்பதைக் காட்ட ஏதோ ஒரு பதிகத்தை எடுத்தார். தாம்பாடிய திருப்பதிக நன்முறையை (இதுவே பிற்காலத்தில் திரு முறைகள் எனப் பெயர் பெற்றன) எடுத்துத் தலையில் வைத்துப் போற்றி எடுத்தார். பதிகங்கள் தம்மால் பாடப் பெற்றவையேனும் இறைவனருளால் பாடப்பெற்றவை என்பதால் தொழுதுஎடுத்தார். திருநீறிட்டுக் கொண்ட கையால் எடுத்தார், திரு நள்ளாற்றுப்பதிகம் கிடைத்தது. தனது அழகிய கைகளால் அவ்வேட்டினை எடுத்து.

திருச்சிற்றம்பலம்

தளிரள வளரொளி தனதெழில் தருதி கழ்மலைமகள்
குளிரிள வளரொளி வனமுலை இணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவு நள்ளாறர் தந்நாமமே
மிளிரிள வளரெறி யிடிலிவை பழுதிலை: மெய்ம்மையே

திருச்சிற்றம்பலம்

என்ற தேவாரம் பாடித்தீயிலிட்டனர். தீயிலிட்ட பதிகத்தின் முதற்பாடல் வருமாறு:

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையாடன்னெடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவணவாடையின் மேல்
நாகமார்த்த நம் பெருமான் மேயது நள்ளாறே

திருச்சிற்றம்பலம்

ஏடு சாம்பராகாது அப்படியே பச்சென்று விளங்கியதால் இப்பதிகத்திற்கு பச்சைப்பதிகம் எனப்பெயரிட்டனர் பக்தர்கள். இறைவர் எல்லாவற்றிலும் நிறைந்தவர் நெருப்பிலும் உள்ளவர். பதிகமும் இறைவனை உள்ளிடைக் கொண்டது. எனவே பதிகம் எழுதிய ஏடு வெந்து சாம்பராகவில்லை. "போகமார்த்த பூண்முலையாள்" என அம்மையை முன்னிட்டுப் பாடியதால் அம்மையின் பச்சை நிறமாக மாறியது. சம்பந்தர் நெருப்பைக் கட்டவில்லை. இறைவன் திருவருளால் பச்சையாகக் காட்டினர்.

சம்பந்தப்பெருமான் பச்சையாக இருந்த அந்த ஏட்டைத்திரும்ப எடுத்து மற்ற ஏடுகளுடன் சேர்த்துக் கட்டிவைத்துக்கொண்டனர். சமணரது ஏடுசாம்பலாயிற்று. "பிணியையும் தீர்க்கவில்லை. நெருப்பிலும் தோற்றீர். இனி என்ன செய்யப் போகின்றீர்?" என்று அரசன் சமணரைக் கேட்க அவர்கள் "இரண்டுமுறை வெல்ல முடியவில்லை. இவருடைய மந்திரங்களையும் எழுதி வைகையாற்றிலிடுவோம். எந்த ஏடு தண்ணீரை எதிர்த்து வருகிறதோ அவரது கட்சி வெல்லும் நாங்கள் தோற்றோமென்றால், எங்களை அரசன் கழுவிலேற்றட்டும்" ஈனத்தமாகக் கூறினர் சமணர்.

தமது மந்திரங்களாகிய "அத்தி-நாத்தி" என்பன வற்றை சமணர் எழுதி, அந்த ஏட்டை வைகையாற்றிலிட அது ஆற்றுடன் போய் விட்டது சம்பந்தமூர்த்தி.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர்! வானவர் ஆனினம் !
வீழ்க தண்புனல்! வேந்தனும் ஓங்குக !
ஆழ்க தீயது! எல்லாம் அரன் நமாமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே

திருச்சிற்றம்பலம்

என்ற முதற்பாட்டுடன் கூடிய பதிகத்தை ஆற்றிவிட அது தண்ணீரை எதிர்த்துச் சென்று திருவேங்கடம் என்ற பதியில் நின்றது.

மேற்படி பதிகத்தின் பத்துப்பாடல்களும் சேக்கிழார் பெருமான்தானே பொருள் செய்தளிருயுள்ளார். தேவார வரிசைபற்றி இறைவனருள் துணைகொண்டு கட்டுரை எழுத எண்ணியுள்ளோம். அங்கு விவரமாகக் கூறியுள்ளோம் "வேந்தனும் ஓங்குக." என்றும் இப் பாடலில் அமைந்ததால், பாண்டியனின் கூனும் நீங்கியது. நீரை எதிர்த்துச்சென்று தங்கியஇடம் திருவேடகமாயிற்று

திருச்சிற்றம்பலம்

வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னிய திருவடி புதுமல ரவைகொடு
மன்னிய மறையவர் வழிபட வடியார்
இன்னிசை பாடல ரேடகத்தொருவனே

திருச்சிற்றம்பலம்

என்று பிள்ளையார் தேவாரம்பாடியருளினர். இங்கு இறைவனின் பெயர் ஏடகநாதர். அம்மை உமாதேவியார்.

சமணர்கழுவேறினா இதுதான் உண்மை. தாமே ஏறினர் எனத்திருவிளையாடற்புராணம் கூறுகின்றது "சிவனடியாரிருந்த மடத்தில் தீ வைத்த சமணருக்குச் செய்யப்பட்ட தண்டனையை சம்பந்தமூர்த்தி விலக்காதிருந்தார்" என்பது சேக்கிழார் பெருமானின் திருவாக்கு

புகலியில் வந்த ஞான புங்கவரதனைக் கேட்டும்
இகலிலரெனுஞ்சைவரிருந்து வாழ் மடத்திற்றிங்கு
தகவிலாச்சமணர் செய்த தன்மையாற்சாலு மென்றே
மிகையிலா வேந்தன் செய்கை விலக்கிடாதிருந்தவேலை

சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருப்புன்கூர்தேவாரத்தில் "நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன்" என்ற பாசுரத்திற்கு பொருள் காணும் போது "ஞானசம்பந்தர் சமணர் கழு வேற்றப்பட்டபோது பார்த்துக் கொண்டுவாளாவிருந்தார்,.

அது குற்றம். அந்தக் குற்றத்தையும் குணமாக இறைவர் கொண்டார் எனப் பொருள் கூறுகின்றனர். இது பொருத்தமாகத் தெரியவில்லை. அரசன் தத்க தண்டனை அளித்தான். எனத் தொனிக்கும்படி "மிகையிலா வேந்தன்" என்கிறார் சேக்கிழார் பெருமான். அரசன் தீர்ப்பளித்த பின் எவரும் குறுக்கிட்டு தண்டனையை நிறுத்தும் வழக்கம் அனேகமாகக் கிடையாது. எனின் சம்பந்தர் செய்த குற்றம் என்ன? என்றால், நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் 'ஆணை நமதே'', ''நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்'', ''பூசுரன் ஞானசம்பந்தன்'' என்று தன்னையே பாடியுள்ளதுதான் சம்பந்தமூர்த்திகள் செய்த குற்றம். அதையும் இறைவன் குணமாகக் கொண்டார் எனக்கூறுகிறார் 'ஒரு சைவ சித்தாந்த வித்தகர்!'

பாண்டியன் திருநீறு அணிந்தான். யாவரும் அணிந்தனர். சைவம் தழைத்தது, சமணம் மறைந்தது. வெற்றி பெற்ற சம்பந்தர் ஆலவாய் அண்ணலை,

திருச்சிற்றம்பலம்

விடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள் கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே

திருச்சிற்றம்பலம்

எனப் பாடிப் பரவித் தொழுதார்.

—: திருச்சிற்றம்பலம் :—



# ஞானசம்பந்தரும் நற்றமிழும்

திரு, சு. இராமலிங்கம் அவர்கள்,
"கணித ஜோதிடர்" (ஸ்ரீமாணிக்கவாசகர் இல்லம்)
சீ க ம் ப ட் டி.

2-ந் திரு முறை: சீர்காழி பண்: நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

மானத்திண்புய வரிசிலைப் பார்த்தனைத் தவங்கெட மதித்தன்று
கானத்தேதிரி வேடனாயமர் செயக்கண்டருள் புரிந்தார்பூந்
தேனைத் தேர்ந்துசேர் வண்டுகள் திரிதருஞ் சிரபுரத்துறை யெங்கள்
கோனைக்கும்பிடும் அடியாரைக் கொடுவினை குற்றங்கள் நலியாவே

திருச்சிற்றம்பலம் (3)

பரங்கருணைத் தடங்கடலாகிய அம்பலவாணரது எல்லை யில்லாத கருணையினாலே, திருச்சிரபுரத்து திருப்பதிகத்திலே = மூன்றாவது திருப்பாடலின் அமுதத்தை பருகுவோமாக. பெருமை பொருந்திய வலிமையுள்ள புயத்தையும், கட்டிய வில்லையும் உடைய அருச்சுனனை அவனது தவங்கெட நினைத்து முன்பு, காட்டிலே திரிகின்ற வேடனாக எழுந்தருளி போர் செய்ய அவன் தோல்வியையும், தவத்தையும் கண்டு அருள் புரிந்தார். என்பது முதலிரண்டடியின் பொருளாகும். பாண்டவர்களில் மிகச் சிறந்தவன் = அருச்சுனன், அவனுடைய புயவலிமைக்கு நிகரானவர்கள் யாருமில்லை. சிவபெருமானுடன் வில்யுத்தமும் உடம்பு கலந்த மல்யுத்தமும் செய்தவன். இதனால் சிவபெருமா

னுடைய திருமேனியின் பரிசம் பட்ட காரணத்தால் அவனுடைய புயத்தை, பெருமை சேர்ந்த வலிய புய மென்று அருளிச் செய்தார்.

அருச்சுனன் நாள்தோறும் சிவபெருமானைப் பூசை செய்ததனுலும், சிவபெருமானை நோக்கி இமயமலையில் ஐந்து மாதங்கள் கடுந்தவஞ் செய்து பாசுபதக்கணை பெற்றதனுலுந்தான் பாரத யுத்தத்தில் வெற்றிகிடைத்தது. இல்லையானுல் ஆயிரங் கிருஷ்ணனும் ஆயிரம் அருச்சுனர் களும் கூடி, ஆயிரம் வருஷம் போர் செய்தாலும் துரியோ தனுதிகளை வெல்ல முடியாது. தருமனிடத்தில் வேதவி வியாசர் கூறுகிருர். தருமா சிவபெருமானிடத்து தவஞ் செய்து பாசுபதாஸ்திரம் வாங்கி வராவிடில் பகையை வெல்ல முடியாது அதற்குத் தகுதி அருச்சுனனே என்றுங் கூறுகிறது. வில்லிப்புத்தூராழ்வார் பாடல்,

கவி

தோத்திரமான தெய்வச் சுருதிகள் யாவநான்காக்
கோத்தவன் பின்னுஞ் சொல்வான் குன்றவில்லவன் பாலின்று
பார்த்தனே சென்று பாசுபதக்கணை வாங்கினல்லால்
ஆர்த்த பைங்கழலா யெய்தாகரும் பகைமுடிந்த லென்ருன.

இந்தப் பாட்டிலே மிக ஆழமான கருத்துள்ளது சிவபெரு மானிடத்து பாசுபதக்கணை வாங்காவிடில், பகையை வெல்ல முடியாது என்று கூறுகிறவர். சாதாரணக் கல்வி யுடையவரல்ல, வேதங்களை நான்காக வகுத்தவரும் பதினென் புராணங்களையும் அருளிச் செய்தவர் இவ்வாறு கூறுகிருர். என்று கூறுங் கருத்தை நெஞ்சிலே பதித்துக் கொள்ள வேண்டும். சிவபூசைக்காரனுகிய கிருஷ்ணன் சிநேகமும், சிவபூசையும் சிவாஸ்திரமுங் கூடியதால்தான் அருச்சுனனுக்கு வெற்றி கிடைத்தது. அருச்சுனனது சிவ பூசையைப் பாடுகிருர் ஞானசம்பந்த சுவாமிகள்,

வஞ்சமனத்தஞ் சொடுக்கி வைகலு நற்பூசனையால்
நஞ்சமுது செய்தருளும் நம்பியெனவே நினையும்
பஞ்சவரில் பார்த்தனுக்கு பாசுபதம் ஈந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே.

என்பதால் தெளியலாம். சிவபெருமானே பரம்பொருள் என்று வரலாற்று மூலமாகக் கூறுவது மகாபாரதமும் இராமாயணமும். ஆனுல் அந்த நூலைப் படிக்கும் அன்பர்கள் பலபேர் அதை உணருவதில்லை அதுஅவர்கள் செய்த பாவம் போலும் நிற்க. அருச்சுனனுக்கு அருள் செய்ய சிவபெருமான் வேடனுக எழுந்தருளினது மிக்க அளவில்லாத கருணையை தெரிவிப்பதாகும். வேடனுக எழுந்தருளி அருச்சுனனுக்கு இடையூறு செய்ய வந்த மூகாசுரனென்னும் பன்றியைக் கொன்று பார்வதியோடு விடையின் மேல் காட்சி கொடுத்து, பாசுபதக்கணை வழங்கி அருள்புரிந்ததை எண்ணிப் பார்த்தால் சிவபெருமான் அடியார்களுக்கு எவ்வளவு எளியவனுக இரங்கி வருகின்ருர் என்பதை உணரலாம். திருவாசகத்தில் ஒருவாசகம்

முன்னை என்னுடை வல்வினை போயிட முக்கணதுடை யெந்தை
தன்னையாவரும் அறிவதற்கரியவன் எளியவன்;அடியார்க்கு
பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனிற் இளமதியது வைத்த
அன்னை யாண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே.

சிவபெருமான் தரித்தருளும் வேடமெல்லாம் நம்மை யாட் கொள்ளும் பொருட்டேயாகும். அவருக்காக எத்தொழிலும் செய்வதில்லை, திருவாசகம் அருளிப்பாடு,

காட்டகத்தே வேடன் கடலில் வலைவாணன்
நாட்டிற் பரிப்பாகன் நம்வினையை—வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து

என்பதால் தெளியலாம். சிவபெருமான் அருச்சுன ேேடு போர்புரிந்து அவனுடைய வில்லால் அடிபட்டு தானே சர்வவியாபியாய், எல்லா உயிர்க்கும் உயிராய்

மூலப் பொருளாய் விளங்குபவன் என்பதை உணரவைத்த பெருங் கருணை மிகவியப்பானது சிவபெருமான் மீதுப்ட்ட அடிசராசரங்கள் அத்தனையிலும் பட்டதாம். வில்லிப்புத் தூராழ்வார் பாடுகிறார் அற்புதமான பாடல், கேள்வியாக கேட்கிறார்.

விண்ணிலுறைவானவரில் யாரடிபடாதவர் விரிஞ்சனரியேமுதலினோர்
மண்ணிலுறைமானவரில் யாரடிபடாதவர் மனுக்கள் முதலோர்அதலக்
கண்ணிலுறை நாகர்களில் யாரடிபடாதவர்கட்செவிமகிபன்முதலா
எண்ணில்பலயோனியிலும் யாவடிபடாதனயிருந்துழியிருந்துழியரோ.

என்னும் பாடல் மிகசிறப்புடையது அன்பர்கள் மனதில் வைத்துக்கொள்வார்களாக இக்கருத்துக்களெல்லா மடங்க சம்பந்தசுவாமிகள் "மானத்திண்புயவரிசிலைப் பார்த்தனைத் தவங்கெடமதித்தன்று. கானத்தேதிரி வேடனையமர் செயக்கண்டருள் புரிந்தார்-என்பதால் தெளியவைக்கிறார். மூன்றாவது அடியின் பொருளை அநுபவிப்போம். வண்டுகள் பலவகையுண்டு! பல வண்டுகள் மலமுதலான அசுத்தப்பொருள்களையே ஓயாது தேடித்திரிந்து அதையே அநுபவித்துமாண்டொழியும். (2) சிலவண்டுகள் மலமுதலான அசுத்தப்பொருளையும் அநுபவிக்கும். தேன் முதலான சுத்தப்பொருளையும் அநுபவிக்கும். இரண்டு பொருளிலும் பற்றுவைத்து அலையும். (3) சிலவண்டுகள். தேன் ஒன்றையே அது இருக்குமிடமெல்லாம் சென்று சேகரித்தும் அங்கங்கே பூக்களிலே தேனை அருந்தியும் தேன் ஒன்றிலேயே பற்று வைத்துத்திரியும். இந்தமூவகை வண்டுகளைப்போல மனிதர்களும் மூவகை மனிதர்களுண்டு பல மனிதர்கள். தீயபொருள்களை மதுமாமிசாதிகளை உண்ணுதல் தீய காரியங்களையே செய்தல். தீயவார்த்தைகளையே பேசுதல் மனைவிமக்கள் செல்வங்கள் இவைகளையே சாசுவதாக

நினைத்து அதிலேயே பற்றுவைத்தல் இப்படித்திரிந்து வீணே இறந்து விடுவார்கள் இவர்கள் முதலிலே கூறிய வண்டுக்கு உவமை. இவர்கள் அதமர் எனப்பெயர் பெறுவார்கள் பலமனிதர்கள் அசுத்தப்பொருள்களாகிய மனைவிமக்கள்பதவி ஐஸ்வரியம் இவைகளையும்தேடிக் கொண்டு அதனோடு சுத்தப்பொருளாகிய இறைவனையும் தேடித்திரிவார்கள் இவர்கள் இரண்டாவது கூறிய வண்டுக்கு உவமை இவர்கள் மத்திமர்கள்எனப்பெயர் பெறுவார்கள். சில மனிதர்கள் அசுத்தப்பொருள்களாகிய உலகத்தை விரும்பாமல் அதில் சிறிதும் பற்றுவையாது. சுத்தப்பொருளாகிய இறைவன் ஒருவனையே தேடியும் நாடியும் பாடியும் கூடியும் அநுபவித்துப் பேரானந் தமடைவார்கள் இவர்கள் உத்தமர்கள் என்று பெயர் பெறுவார்கள். இவர்கள் மூன்றாவது கூறிய வண்டுக்கு உவமையாவார்கள். அதமர்கள் பலகோடிப்பிறவி யெடுத்தும் இறைவனை அடையமாட்டார்கள். மத்திமர்கள் பலகோடிப்பிறவியெடுத்தும் இறைவனை அடையமாட்டார் கள். மத்திமர்கள் சிலபிறவிகளிலே இறைவனை அடைவார்கள் உத்தமர்கள் ஒரே பிறவியில் இறைவனைச் சேருவார்கள். சீர்காழியில் வண்டுகள் எப்பொழுதும் தேனையே தேடித்திரிந்து அநுபவிக்கிறதாம் இக்கருத்தை சம்பந்தசுவாமிகள் பூந்தேனை தேர்ந்து சேர்வண்டுகள் திரிதரும் சிரபுரம் என்று அருளிச்செய்துள்ளார். அன்பர்கள் மூன்றாவது வண்டுகளைப் போலாகமுயற்சிப்பார்களாக. நான்காவது அடியின் பொருளைப்பார்ப்போம். சிரபுரத்தில் எழுந்தருளியிருக்கும் எமது அரசனாகிய சிவபெருமானைக் கும்பிடுகிற அடியார்களை கொடுவினையும் குற்றமும் சேராது என்பதாம்-சிவபெருமான் எல்லா இடங்களிலும் நிறைந் திருக்கிறார். அது பாலிலே நெய்யிருப்பதுபோலவாகும். ஆலயத்திலே சிவனடியாரிடத்தில் தயிரிலே நெய் இருப்பது போல விளங்கித்தோன்றுவார், இந்த இரண்டிடத்திலும்

வழிபாடு செய்பவர்களுக்கு அருள் தவருது விரைவிலே கிடைக்கும் சிவப்பிரகாசத்திலே பன்னிரண்டாஞ் சூத்திரத்திலே.

> தொண்டர்களிடத்தும் வானேர் தொழுந்திருமேனிதானும்
> அண்டருங்கண்டிலாத அண்ணலேயென விறைஞ்சி
> பெண்டரளங்கள் சிந்த விழிமொழிகுழறி மெய்யே
> கண்டுகொண்டிருப்பர் ஞானக்கடலமுதருந்தினேரே.

என்பதால் தெளியலாம் இந்த இரண்டு இடங்களில் தான் வழிபாடு செய்யவேண்டும். இந்த இரண்டு இடங்களில்தான் சிவபெருமானுடைய திருவருளைப் பெறமுடியும் மற்ற இடங்களில் அருள் பெறமுடியாது ஆனுல் பலபேர் மற்ற இடங்களில் வழிபாடு செய்து காலம் பொருள் இவைகளை செலவிடுகிருர்கள். அவர்களுடைய அறியாமையை என்னென்று கூறுவது பாவம். இவர்கள் எப்படி திருவருளைப்பெறமுடியும் சிவலிங்கத்திருமேனி சிவனடியார்கள் இவ்விரண்டிடங்களில் சிவபெருமான் தோன்றியருள் புரிவார்.

சிவபெருமான் கருணையைப்பெற ஆசைப்படும் அன்பர்கள் இவ்விரண்டிடங்களில் வழிபட்டுய்வார்களாக.


தாபரசங்கமங்களென்றிரண்டுருவினின்று மாபரன் பூசை கொண்டு மன்னுயிர்க்கருளைவைப்பான் என்று சிவஞானசித்தியார் கூறுகின்றது.

இனி சிவபெருமானை கும்பிடும் அடியாரை கொடுவினை என்னும் தீவினைகள் பொருந்தாது. குற்றம் என்னும் தீயபழக்கங்கள், பழிகள் சேராது, தீவினையும், தீயபழக்கமும் சஞ்சித வினையும் ஆகாமிய வினையும் ஆகும். இவை இரண்டும் அற்றுப் போனுல் பிறவி அற்றுப்போகும் பிறவி அற ஒரே ஒருவழி அது. சிவபெருமானைக் கும்பிடும் வழியாம். சிவபெருமானைக் கும்பிடாமல் பிறவியை ஒழித்துக் கொள்ள முடியாது. கும்பிடுவது பலவகை. மாதாவை

பிதாவை வயிற்றுக்கு நேரே கையைக் கூப்பி வணங்குதல் வேண்டும். அன்பர்களை மார்புக்கு நேரே கையைக் கூப்பி வணங்க வேண்டும். குருவுக்கு நெற்றிக்கு நேரே கும்பிட வேண்டும். தெய்வம் விஷ்ணுவுக்கும், மற்றத் தேவர்களுக்கும் நெற்றிக்கு மேலே கும்பிட வேண்டும். சிவபெருமானுக்கு சிரத்துக்கு மேலே பன்னிரண்டங்குலத்திலே கும்பிடுதல் வேண்டும். அதாவது கை எவ்வளவு உயரம் உள்ளதோ அந்த உயரத்திலே கும்பிட வேண்டும். சிவாசம முறைப்படி சிவபெருமானை பூசித்து கும்பிடு முறையிலே கும்பிட வேண்டும். அப்படிக் கும்பிடும் அடியார்களை தீவினையும், குற்றமுஞ் சேராது. என்று தெளிந்து கொள்ள வேண்டும்.

இக்கருத்தை, ஞானசம்பந்த சுவாமிகள், சிரபுரத் துறையெங்கள் கோனைக் கும்பிடும் அடியாரைக் கொடுவினை குற்றங்கள் குறுகாவே என்பதால் தெளிய வைக்கிறார். தெளிந்த வழியிலே நின்றுய்வோமாக.

(தொடரும்)



[சிவ சிவ

# சிக்கலைத் தீர்த்து வைப்பான் சிங்கார வேலவன்

ஆக்கியோன்:
சிவத்திரு, சீ. சுவாமிநாதசர்மா அவர்கள்,
சூரமங்கலம் Bo. [தஞ்சாவூர் மாவட்டம்]

ஒரே ஒரு மணித்துளி என்ன நடந்தது என்பதை நினைக்கக்கூட முடியவில்லை செந்தில் நாதனுல்.

மிதிவண்டி ஒருபக்கம் கிடக்கிறது. அதில் மாட்டியிருந்த பையை ஐந்து ஆறு திருடர்கள் பிடுங்கிக் கொண்டு ஒரு மோட்டார் வண்டியில் போகிருர்கள். செந்தில்நாதன் நட்டநடுச் சாலையில் விழுந்து கிடக்கிருன். எல்லாம் கனவு போல் தெரிய வந்தது,

இதற்குள் நான்கு ஐந்து பேர்கள் ஓடிவருகிருர்கள், அதற்குப் பின் செந்தில்நாதனுல் எதையும் நினைக்கக் கூட முடியவில்லை. இரத்த-காயம் ஒருபக்கம்,

செந்தில்நாதன் தனியார் நிர்வாக பென்சில் தொழிற் சாலையில் காசாளாராக நாகப்பட்டினத்தில் பணிசெய்து வந்தான். அவனுக்கு மாதம் ரூ. 600 சம்பளம். இத் தொழிற்சாலையின் கிளை திருவாரூரில் இருந்து வந்தது. வாரம் இரண்டு முறையாவது பில் பணம் வாங்கவும், வசூல்செய்யவும், கிளைத் தொழிற்சாலையின் வருமானத்தை நாகப்பட்டினம் ஸ்டேட் பாங்கில் கட்டவருவான். அன்றைக்கு பத்து, பதினைந்து பில்கள் பாஸ்ஆகி பாங்குக்கு வந்துவிட்டதால், பணம் வாங்கிக் கொண்டு வரலாம் என்று கிளம்பினுன்.

மதியம் உணவிற்கு சட்டயப்பர் மேல வீதியில் அவன் வீட்டிற்கு வந்துவிடுவான். மிதிவண்டியில் அன்றைக்கு உணவருந்தி விட்டு அவசர அவசரமாகப் பாங்க்குக்கு போய் பணம் வாங்கிக் கொண்டு அப்படியே அலுவலகத்துக்குக் போய்விடலாம் என்று கிளம்பிக் கொண்டிருந்த செந்தில்நாதனிடம் அவன் துணைவியார் சண்முகவடியம்மாள் குழைந்தபடியே "உங்கள்ப் பெட டியில் சிங்கார வேலனுக்கு உயர்தரப் பட்டுத்துணி இரண்டு மீட்டர் உள்ளது. சாயங்காலம் வரும்பொழுது மறவாமல் அருகடித்துக் கொண்டு வந்துவிடுங்கள் என்ருள்.

"இப்பொழுது அதற்கு என்ன அவசரம் என்று எரிச்சலுடன் சொல்லிவிட்டு மிதிவண்டியை எடுத்துக் புறப்பட்டு விட்டான்.

பாங்கில் பத்து, பதினைந்து பில்கள் பாஸ் செய் வதற்கு பதில் நான்கு பில்களுக்கு பாசாகி வந்திருந்தன மொத்தம் மூவாயிரத்து எழுநூற்றேழு ரூபாய் என்பது காசுகள் மட்டும் வந்தன. வந்தப் பணத்தை தன் பையில் வைத்து மிதிவண்டி முன்னுல் மாட்டிக் கொண்டு பல சாலைகளையும் கடந்து குறுக்கு ரோட்டில் வந்து கொண் டிருந்தான். மதியம் நான்கு மணிக்கு மேலாகி விட்டது. ஆள் நடமாட்டம் இல்லாத நேரம்.

வேகமாக ஒரு வாடகை மோட்டார் வந்து அவன் மிதிவண்டி முன்னுல் நின்றது. ஒரே ஒரு மணித்துளி. செந்தில்நாதனுல் நிதானிப்பதற்குள், மிதிவண்டியில் இருந்த பையை வெடுக்கென்று யாரோ பிடுங்கிருர்கள். அவன் மிதிவண்டி கீழே விழுந்து விட்டது. செந்தில் நாதனும் கீழேவிழுந்தான். வேகமாக வாடகை மோட்டார் புறப்பட்டுச் சென்ற ஓசைதான் காதில் ஒலித்தது

நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள்.

பணம்.........பணம்.. ......திருடன் டாக்சி..................... என்று முனகிக் கொண்டிருந்தான். செந்தில்நாதன்,

சண்முகவடிவம்மாள் கண்ணீர் ஊற்ருக பெருக் கெடுத்து ஓடும் வண்ணம் அழுது கொண்டு அவன் அருகில் அமர்ந்திருந்தாள்.

காவல்துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுத் துக் கொண்டார்கள். ஆனுல் திருடர்கள் யாரும் அகப்பட வில்லை. பணமும் கிடைக்கவில்லை

ஆபிசு கணக்கு முடிக்கும் போது இருப்பு சரியாயிருந்தது. செந்தில்நாதன்தான் பணத்தைக் கையாடல் செய்து, அவனே இங்ஙன நாடகம் நடத்துகிருன் என்று நிர்வாகி நித்தியாநந்தமும் சகஅதிகாரிகளும் அவன் மீது குற்றம் சாட்டினுர்.

அவன் இக்கட்டான நிலையை உணர்ந்த அக்கவுண்ட் அருணுசலம் அவர்கள் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுத்து உதவினுர். பாக்கி பணம் ?

சண்முக வடிவம்மாள் தனது எல்லா நகைகளையும் வெள்ளிப்பாத்திரங்களையும் அடமானம் செய்து பணம் முழுவதையும் கட்டி விட்டாள்.

செந்தில்நாதன் மனமுடைந்து நடை பிணம்போல் காட்சியளித்தான்.

காவல் துறையினர் பல நடவடிக்கை செய்துப் பார்த்தார்கள். ஆனுல் திருடன் அகப்படவில்லை.

"இப்பொழுதுகூட சில நபர்கள் நான் தான் பணத்தை சொந்தப்பிரயோகம்செய்துவிட்டு இங்ஙனம் ஓர் நாடகம் நடத்தியிருக்கிறேன் என்று சந்தேகப்படுகிருர்கள். சிக்கலைத்தீர்த்தருளும் சிங்காரவேலா! வள்ளிக்காந்தனே! கார்மயில் ஊர்தியானே! வெள்ளை வாரணக் கொடியோனே! ஏழைப்பங்காளா! இந்த அபவாதத்தை நீக்கவாவது அத்திருடர்கள் பிடிபடக் கூடாதா?" என்று ஏங்குவான்.

அத்தான் கவலையை மறமின்! எப்படியாவது ஒருநாள் சிக்கல் சிங்காரவேலவன் திருவருளால் அந்தத் திருடர்கள் பிடிபடத்தான் செய்வார்கள். அப்பொழுது உண்மை வெளியாகும் என்று அவன் துணைவியார் ஆறுதல்கூறி வந்தாள்.

அப்படி இப்படி என்று ஒருமாதம் ஓடிவிட்டது. காயம் ஆறிவிட்டது, ஆனுல் அபவாதம் என்கிற தழும்பு மாற்றம் செய்யப்படவில்லை.

எட்டுக்கார்த்திகைகளுக்கு சிக்கல் திருக்கோயிலுக்கு வருவதாக அவனும், அவன் இல்லாளும் வேண்டுதல் செய்து கொண்டார்கள்.

அன்று எட்டாவது கார்த்திகை செந்தில் நாதனும், சண்முகவடிவம்மாளும் நாகப்பட்டினம் To தேவூர் நகரப்

பேருந்து வண்டியில் பிரயாணம் செய்துக் கொண்டு வந்தார்கள். கார்த்திகை நாளாதலால் நல்ல கூட்டம் செந்தில்நாதனும், அவன் இல்லத்தரசியும் நின்று கொண்டே பிரயாணம் செய்தார்கள்.

திடீரென்று அத்தான் அதோ பாருங்கள் அந்தப் பெண் போட்டிருக்கிற ஜாக்கெட்டை என்று செந்தில் நாதன் செவிகளில் கிசுகிசுத்தாள் சண்முகவடிவு.

சும்மா இரு சண்முகவடிவு உன் பட்டுத்துணியைப் போல் அநேகம் பேர் போட்டிருப்பார்கள். பேசாமல் வா... என்று செந்தில்நாதன் அவளை அடக்கினான்.

மணவாளன் சொற்களைக் கேளாமல் வேகமாகச் சென்று நடுத்தர வயதுள்ள ஒரு மாதரசியிடம் சென்று இந்த ஜாக்ட் உனக்கு ஏதடி, அதிட்டினாள். அம்மாதரசிக்கு கோபம் வந்து விட்டது. அதனால் கண்டபடி கத்தினாள்; ஒரே குழப்பம் பஸ் நின்றுவிட்டது.

அம்மாதரசியுடன் வந்திருந்த ஆண்மக்கள் இருவரும் பஸ்ஸை விட்டு இறங்கி ஓட்டம் பிடித்தனர். பஸ்சில் வந்த பிரயாணிகளும் விடாமல் துரத்திப் போய் பிடித்தார்கள்.

திருட்டு நாயே! எவ்வளவோ சொல்லியும் புதுத்துணியால் தைத்த ஜாக்கெட்டைப் போட்டுக் கொண்டு வந்தாய் இப்போது பார் எல்லோரும் மாட்டிக் கொண்டோம். சண்முகவடிவின் பட்டுத்துணி ஜாக்கெட்டைப் போட்டு வந்த கண்ணம்மாவை அவளுடைய ஆசை நாயகன் திட்டினான்.

சண்முகவடிவு உன் பட்டுத் துணிதான் கறையைப் போக்கியது. ஆனால் நீ இவ்வளவு துணிச்சலுடன் சண்டை போடவில்லை என்றால் அந்த திருட்டுக் கூட்டத்தை பிடித்திருக்க முடியாது என்று செந்தில்நாதன் பாராட்டினான்.

காவல் துறையினரால் செந்தில்நாதனுக்கு பரிசு ஐயாயிரம் ரூபாய் வந்தது. அவன் அலுவலகத்தில் அவனுக்கு தலைமைக் காசாளாராகப் பதவி உயர்ந்தது.

சிக்கல் சிங்காரவேலன் திருக்கோயிலிருக்கும் திசை நோக்கி இருவரும் கைதொழுதார்கள்.

'அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல் தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார்முன்"

— திருமுருகாற்றுப்படை வெண்பா.